திங்நாகர் இயற்றிய

# குந்தமாலா




தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீடு எண் : 420

## திங்நாகர்

இயற்றிய

# குந்தமாலா

## (முல்லைப்பூ மாலை)

தமிழாக்கம்

பன்மொழிப்புலவர்

**மு.கு. ஜகந்நாதராஜா**

தஞ்சாவூர் மகாராசா சரபோசியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர் -613 009

கி.பி.2000]

விலை: ரூ. 40/-

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | குந்தமாலா |
| நூலாசிரியர் | : | திங்நாகர் |
| பதிப்பாசிரியர் | : | மு.கு. ஜகந்நாதராஜா |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 420 |
| மொழி | : | மூலம் வடமொழி, தமிழாக்கம் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | சூலை, 2000 |
| தாள் | : | 16 கி.கி. |
| நூல் அளவு | : | 21 x 14 செ.மீ |
| பக்கங்கள் | : | 104 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | நாடகம் |
| விலை | : | ரூ.40/- |

பன்மொழிச் சுவடிகளின் கருவூலமாகவும் பன்மொழி நூல்களின் களஞ்சியமாகவும் சரசுவதி மகால் நூலகம் விளங்குகின்றது. இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ள வடமொழி, தெலுங்கு முதலிய பிறமொழிச் சுவடிகள் தமிழாக்கத்தோடு பதிப்பித்து வெளியிடப்படுவது நூலகப் பதிப்புச் சிறப்புகளுள் ஒன்றாகும்.

நூலகத்தின் வடமொழித் துறையில் இடம்பெற்றுள்ள **குந்தமாலா** என்னும் சுவடியை அடிப்படையாகக் கொண்டு குந்தமாலா என்னும் நூலின் தமிழாக்கம் இங்குத் தனிநூலாக வெளியிடப்படுகின்றது.

குந்தமாலா என்பது சிறந்த வடமொழி நாடக இலக்கியமாகும். இந்நூலை வடமொழியின் சிறந்த பத்து நாடகங்களுள் ஒன்றாக அறிஞர் கருதுவர். இவ்விலக்கியத்தைப் படைத்த புலவர் திங்நாகர் ஆவார். குந்தமாலா என்னும் இப்படைப்பு சீதையின் வனவாசத்தையும் இராமனின் பிரிவுத் துயரையும் கூறும் நாடகமாகும்.

இந்நாடக இலக்கியத்தை அழகுத்தமிழில் பன்மொழிப்புலவர் **திரு. மு.கு. ஜகந்நாதராஜா** அவர்கள் மொழிபெயர்த்து அளித்துள்ளார். அவருக்கு என்னுடைய பாராட்டுகள்.

இந்நூலின் வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை

நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் **திரு. சாமி. சிவஞானம்** அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் **திரு.அ.பஞ்சநாதன்** அவர்களுக்கும், இந்நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என்னுடைய பாராட்டுகள் உரித்தாகுக.

இவ்விலக்கிய மொழிபெயர்ப்பு நூல், இலக்கிய உலகில் பெருவரவேற்பைப் பெறும் என நம்புகின்றேன்.

தஞ்சாவூர்,
20.7.2000.

**மு. இராசாராம், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர் தலைவர்
மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.



# முன்னுரை

உலக இலக்கியத்தில் வடமொழி நாடகங்களுக்குத் தனிச் சிறப்புண்டு. கிரேக்க நாடகங்கள் தொன்மைச் சிறப்புடையவைதான் எனினும் வடமொழி நாடகங்களின் கற்பனை வளம்சான்ற கவித்துவ நயத்தில் வடமொழி நாடகங்களே சிறந்துள்ளன என்பதில் ஐயமில்லை. வடமொழி நாடகம், கிரேக்க கலாசாரத் தொடர்பால் ஏற்பட்டது என்றும் சில ஆய்வாளர்கள் கூறுவர். யவனிகா (ஜவனிகா) என்னும் வடமொழிச் சொல் திரையைக் குறிக்கும். யவனம் என்பது கிரேக்கத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஆதலின் தொன்மையான நாடகத்துறை கிரேக்கரின் தொடர்பால் செழுமையுற்றது என்பதில் ஐயமில்லை. முத்தமிழ் என்று கூறப்படினும் மூன்றாவது தமிழான நாடகத் தமிழ் - நமக்குக் கிடைக்கவில்லை. நாடக இலக்கணம் கூறும் பழைய நூல்கள் பற்றி சிலப்பதிகார அடியார்க்கு நல்லாரின் உரைக்குறிப்புகளிலிருந்து நாடகத் தமிழ் **(கூத்த நூல்)** சிறப்புடன் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது. நற்பேறின்மையால் நாம் இழந்து விட்டோம். சமஸ்கிருத, பிராகிருதங்களாகிய வடமொழிகளில் மட்டுமே தொன்மையான நாடகங்கள் கிட்டின. தமிழ், தெலுங்கு கன்னடம் ஆகிய தொல்லிலக்கிய வளம் சான்ற மொழிகளில் நாடகங்கள் கிட்டவில்லை. வடமொழியில் திருச்ய காவியம், என்றும் சிரவ்ய காவியம் என்றும் இலக்கியத்தை இரண்டாகப் பகுத்துரைப்பது மரபு. திருச்ய காவியம் என்பது காண்கிற காவியம் என்றும் சிரவ்ய காவியம் என்பது கேட்கிற காவியம் என்றும் பொருளாகும். திருச்ய காவியமாகிய நாடகத்துக்குள்ள சிறப்பு இதனால் புலப்படும். நாடகங்களைக்

கொண்டுள்ளதாலதான் வடமொழியில் ரசம் (மெய்ப்பாடு) தொனி, அணிகளை விவரித்துக்கூறும் சிறந்த அலங்கார சாஸ்திரம் வட மொழியில் செழுமையுற்றது. வடமொழி நாடகங்கள் உரையும் செய்யுளும் கலந்த நடையில் அமைந்திருக்கும். பாத்திரங்களுக்கு ஏற்ப மொழி நடையும் பயன்படுத்தியுள்ளனர். மேன்மக்கள் சமஸ்கிருதத்திலும் ஏவலர்கள், பெண்டிர் பிராகிருதத்திலும் பேசுவதாக அமைந்துள்ளது. மாகதம், சௌரசேனி, மகாராஷ்டிரி, பைசாசீ போன்ற பிராகிருத வட்டார மொழிகளையும் பயன்படுத்தியுள்ளனர். மேனாட்டிலக்கியத்தில் கிரேக்க நாடகமாயினும், பிற்கால ஆங்கில நாடகமாயினும் காமடி, (இன்பியல்) டிராஜடி (துன்பியல்) எனும் இருவகை நாடகப் பிரிவு காணப்படுகிறது. ஆனால் நம் நாட்டு மரபில் துன்பியல் நாடகம் இல்லை. அரிச்சந்திரன், கர்ணன், சாருதத்தன் போன்ற துன்பியல் நாடக பாத்திரங்களையும் இறுதியில் தேவர்கள் வந்து இன்பியல் நாடகமாக முடிப்பது வழக்கம். நாடக இலக்கணம் கூறும் நூல்கள் வடமொழியில் பல உள்ளன. பரத நாட்டிய சாஸ்திரம், தசரூபகம், சாஹித்ய தர்ப்பணம் போன்ற சிறந்த அலங்கார சாஸ்திர நூல்களில் நாடக இலக்கணம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ரசம் (மெய்ப்பாடு) தொனி, குறித்த பல சிறந்த ஆய்வுக் கொள்கைகளும் உள்ளன.

நாடகங்கள் பத்து வகைப்படும். பிரகரணம், பாணம், பிரஹசனம், டிமம், வியாயோகம், சமவகாரம், வீதி, அங்கம், ஈஹாமிருகம், நாடகம் என்பவை அவை.

வட மொழி நாடகங்கள் பெரும்பாலும் இராமாயணம், மகாபாரதம், பிருகத்கதை (பெருங்கதை) ஆகிய முப்பெரும் இதிகாச காவியங்களிலிருந்தும், பாகவதம் போன்ற புராணங்களிலிருந்தும் கதையோ, அல்லது பாத்திரமோ தேர்ந்தெடுத்து, ஒருசில மாற்றங்களைச் செய்து, பாத்திரப்படைப்புக்கு மெருகூட்டி கவிநயத்துடன் அமைந்திருக்கும். புத்தர் ஜாதகக் கதைகளிலிருந்தும் ஒருசில

நாடகங்கள் அமைந்துள்ளன.

நாடகங்கள் தோற்பாவைக் கூத்திலிருந்து உருவானதென்பர். பாவையை நூல் கயிறு கொண்டு இயக்குவர். நூல் கயிறு சூத்திரம் எனப்படும் வட மொழி நாடகங்களில் முதலில் முன்னுரைப் பகுதியாக வரும் உரையாடலில் சூத்திரதாரன் (இயக்குநர்) வருவது மரபு. இயக்குநருக்கு சூத்திரதாரன் (நூற்கயிறை தரித்தவர்) என்ற பெயர் வருவதற்கு இதுவே காரணமாகும்.

வடமொழியில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறந்த நாடகங்கள் உள்ளன. எனினும் அவற்றிலும் தேர்தெடுத்த பத்து நாடகங்களை குறிப்பிடுவதானால், அவை இவை :-

| | | | |
|---|---|---|---|
| 1. | சாகுந்தலம் | - | காளிதாசன் |
| 2. | பிரதிமாநாடகம் | - | பாசன் |
| 3. | குந்தமாலா | - | திங்நாகர் |
| 4. | உத்தரராமசரிதம் | - | பவபூதி |
| 5. | நாகானந்தம் | - | ஸ்ரீஹர்ஷர் |
| 6. | மிருச்சகடிகம் | - | சூத்ரகர் |
| 7. | முத்ராராட்சசம் | - | விசாகதத்தர் |
| 8. | வேணீசம்ஹாரம் | - | பட்டநாராயணர் |
| 9. | பாலராமாயணம் | - | ராஜசேகரன் |
| 10. | பிரபோதசந்திரோதயம் | - | கிருஷ்ணமிசிரன் |

இவை தவிர முராரியின் அனர்க்கராகவம், பவபூதியின் மாலதி மாதவம், வேதாந்ததேசிகரின் சங்கல்ப சூரியோதயம், கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹனுமந்நாடகம், ராஜசேகரினின் பிராகிருத நாடகமாகிய கற்பூரமஞ்சரி, சக்திபத்திரனின் ஆச்சரிய சூடாமணி, ஆகியனவும் புகழ்பெற்ற

நாடகங்களாகும். மேற்குறிப்பிட்டபடி வடமொழி நாடகங்களில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்ற நாடகம் திங்நாகரின் குந்தமாலா என்ற நாடகமாகும்.

## திங்நாகர்

இந்த புகழ் மிக்க நாடகத்தை இயற்றியவர் திங்நாகர் என்னும் கவிஞராகும். இந்நூலாசிரியர் பெயர் குறித்தும், காலம் குறித்தும் பல்வேறு முரண்பட்ட ஆய்வுகள் நடந்துள்ளன. மைசூர் அரண்மனைப் பிரதியில் திங்நாகர் என்றும் தஞ்சாவூர் அரண்மனை பிரதியில் தீரநாகர் என்றும் உள்ளது. நாட்டிய தர்ப்பணம் எனும் நூலில் வீரநாகர் என்றும் சதுக்தி கர்ணாமிருதம் எனும் தொகை நூலில் ரவிநாகர் என்றும் உள்ளதாகத் தெரிகிறது. எனினும் ஆய்வாளர்கள் முடிவாக இந்நூலாசிரியர் பெயர் திங்நாகர் என்றே கூறியுள்ளார்கள்.

திங்நாகர் பௌத்தமத ஆச்சாரியராவார். காஞ்சிபுரத்தருகே சிம்ஹவக்த்ரம் எனும் ஊரில் பிறந்தவர். இவ்வூர் செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டத்தைச் சேர்ந்த சீயமங்கலம் என்று பேரறிஞர் மயிலை-சீனி. வேங்கடசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

திங்நாகர் அந்தணர் குலத்தில் பிறந்தவர். காஞ்சியிலிருந்து மேற்படிப்புக்காக நாளந்தா சென்றார். புகழ் மிக்க பௌத்த ஆசாரியராகிய வசுபந்துவின் சீடராகத் திகழ்ந்தார். இவரது காலம் ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

தருக்க நூற்புலமை மிக்க திங்நாகர், வடமொழியில் நியாயப்பிரவேசம், நியாயதுவாரம் எனும் இரண்டு அளவைநூல்கள் இயற்றியுள்ளார். நியாயப்பிரவேசம் - திங்நாகரின் சீடர் சங்கரஸ்வாமி எழுதியதாகும் என்று ஒரு கருத்துள்ளது. இந்நூல் சீனமொழியில் பரமார்த்த (557-569)

என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பரமார்த்த திங்நாகரின் பிறநூல்களையும் சீன மொழியில் மொழி பெயர்த்துள்ளார். திங்நாகரின் பிற பௌத்த தத்துவநூல்கள், பிரமாண சமுச்சயம், ஹேதுசக்ர, பிரமாண சமுச்சயவிருத்தி, ஆலம்பனபரீட்சாவிருத்தி, திரிகால பரீட்சா முதலியன தருக்கப் புலமை சான்ற நூல்களாகும்.

இவரது மற்றொரு சீடர் நாளந்தா பல்கலைக்கழகத் தலைமைப் பேராசிரியராகத் திகழ்ந்த தருமபாலர் ஆகும். தருமபாலர் காஞ்சிபுரத்தைச் சார்ந்த அமைச்சர் ஒருவரின் குமாரர் ஆவார். கி.பி.ஐந்து, ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் பௌத்தப் பேராசிரியர்கள் பலரும் தமிழ்நாட்டினரே யாதலின் திங்நாகர் தமிழ் நாட்டினரே யாவர். திங்நாகர் நூல்கள் திபேத்திய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இத்தகு பெரும் புகழ் வாய்ந்த பௌத்த ஆசாரியராகிய திங்நாகர் தான் பௌத்த மதந்தழுவுதற்கு முன்பு குந்தமாலா நாடகத்தையும் படைத்தார் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். பௌத்த திங்நாகர் வேறு, குந்தமாலா ஆசிரியர் வேறு என்பாரும் உளர்.

திங்நாகர் மாகாகவி காளிதாசரின் சமகாலத்தவர் என்றொரு கருத்தும் உள்ளது. காளிதாசனின் காலம் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை ஆய்வாளர்கள் முரண்பட்ட கருத்தைக் கூறுவர். பொதுவாக கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதே பெரும்பாலோர் ஏற்றுக் கொண்ட காலம் ஆகும். கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டினர் என்பாரும் உளர்.

காளிதாசனின் புகழ்மிக்க மேகதூதத்தில் ஒரு சுலோகம் வருகிறது. அச்சுலோகத்துக்கு உரை எழுதிய மல்லிநாதர் (14 ஆம் நூற்றாண்டு) காளிதாசருக்குப் போட்டியாக திங்நாகர்

இருந்தார் என்று குறிப்பிடுகிறார். அவருக்கு முன்பிருந்த உரையாசிரியராகிய தட்சிணாவர்த்த நாதர் என்பவரும் இதே கருத்தைக் கூறுவதாலும் இக்கருத்து ஏற்புடையதாகக் கருதுவர். இவர்கட்கு முன்பிருந்த உரையாசிரியராகிய வல்லபதேவர் (10 ஆம் நூற்றாண்டு) இச்சுலோக உரையில் இக்கருத்தைக் குறிப்பிடவில்லை.

மேகதூதத்தில் அச் சுலோகம் இது.

அத்[3]ரே: ஸ்ருங்கம் ஹரதி பவன:
கிமிஸ்விதி[3]த் யுன்முகீ[2]பிர்[4]
த்[3]ரஷ்டோத்ஸாஹஸ் சகித சகிதம்
முன்[3]த்[4]ஸித்[3]தா[4]ங்க[3]னாபி[4]:
ஸ்தா[2]னாத[3]ஸ்மாத் ஸரச நிசுலா.
து[3]தபதோங்முக[2] : க[2]ம்
தி[3]ங்நா கா[3]னாம் பதி பரிஹரன்
ஸ்தூ[2]ல ஹஸ்தாவலோான்.

**- மேகதூதம் - 14**

இதன் கருத்தாவது

'காற்றானது மலைச் சிகரத்தை எடுத்துக் கொண்டு வருகிறதோ என்று தலை நிமிர்த்திய பேதையராகிய சித்தமகளிர் அச்சத்துடனும், உற்சாகத்துடனும் பார்க்கப் பெற்றவனாக, பசுமை நிறைந்த நொச்சிச் செடிகள் உடைய இவ்விடத்திலிருந்து வழியில் திசையானைகளின் பருத்த துதிக்கைகளின் செருக்கைத் தவிர்த்து வடதிசை நோக்கி வானத்தை நோக்கி எழுந்து செல்வாயாக' இச் சுலோகத்தின் இறுதியில் வரும் நிலை (நொச்சி) திக்நாகானாம் (திக்கஜங்கள்) என்ற சொற்கள் மறைமுகமாக நிசுல என்று கவிஞரையும், திங்நாகர் என்ற பேராசிரியரையும் குறிப்பதாக தட்சிணாவர்த்தர், மல்லிநாதர் ஆகிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தட்சிணாவர்த்தர் கூறுவதாவது.

'சரஸ நிசுலாதித்யதர நிருல பதே[1]ன நிசுலாபி[4]
தா[4]னா: கஸ்சன சுவிர்விவஷித:
திக்[3]நாகா[3]னாம் - அனேன திக்நாக[3] இதி கோப் யாசா ர்ய'.

காளிதாஸ ப்ரப[3]ந்தா[4] ஸன்யத்ரோகங்தோ அயம ர்த்த இதிஸ்தூல ஹஸ்தாட்பினயைர் தூ[3]ஷயதி'
'மேகோ[4] கஷே[3]ஸ வ.யாஜேன கவிருபா லப4த
இதி'

மல்லிநாதர் கூறுவதாவது

'அத்ரேத[3]மப்யர்த்தான்தரம் த்வனயதி.
ரஸிகோ நிசுலா நாம மஹாகவி: காளிதா
சஸ்ய சஹாத்[4]யாயி பராபாதிதானாம்
காளிதாதாஸப்ரப[3]நத தூ[3]ஷிணாணனாம்
பரிஹர்தா யஸ்மின் ஸ்தானே: .........
தஸ்மாத் ஸ்மதானா துதங்முகே - நிர்தோ[3]ஷத்
வாதுன்னத முக[2] ஸ்ன்பதி[2] - ஸாரஸ்வத
மார்கே[3]. திக்நாகா[3]னாம் - திக்நாகாசார்
யஸ்ய காளிதாசப்ரதி பக்ஷஸ்ய -

இவ்வுரைகளின் கருத்தாவது.

நிசுல என்ற பெயரில் ஒரு கவிஞனைக் குறிப்பிடுகிறார். என்றும் திங்நாக ஆச்சாரியரைக் குறிப்பிடுகிறார் என்றும் தட்சிணாவர்த்தர் கருத்து.

நிசுல என்ற கவிஞர் காளிதாசருடன் படித்த நண்பர் என்றும் காளிதாசரின் நூல்களைக் குற்றம் கூறிய எதிரியாகிய திங்நாகாச்சாரியர் என்பதன் திமிர் பிடித்த கையினால் எழுதும் குற்றங்களைத் தவிர்த்து இலக்கிய வழியில் தம் மேக சந்தேச காவியம் திகழ்வதாகவும் - மறைபொருளாக அமைத்து இக்கவிதை அமைந்துள்ளது என்பது மல்லிநாதர் கருத்து.

காளிதாசரின் சமகாலத்தவர் திங்நாகர் என்பது குறித்து

முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. திக்நாகர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் காளிதாசர் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் அல்லது அதற்கும் முன்புள்ளவர் என்று கருதப்படுகிறது. எனினும் காளிதாசருக்கு இணையான கவிஞரும் அறிஞருமான திங்நாகர் இருந்தார் என்பதில் ஐயமில்லை.

ஹனுமன் நாடகம் என்ற புகழ் மிக்க வடமொழி நாடகம் ஒன்றுள்ளது. இதில் பிற கவிஞர்களது கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளது தெளிவு. இந்நாடக ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. ஹனுமானே வான்மீகிக்குப் போட்டியாக எழுதியதாகவும், வான்மீகி கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்நாடக நூலை கடலில் மறைத்து விட்டதாகவும் போஜ மன்னன் அதைக்கண்டெடுத்ததாகவும் கதை வழங்குகிறது. இந்நூலில் பவபூதி, முராரி, ராஜசேகர் போன்றவர்களின் கவிதைகளும் உள்ளன. திங்நாகரின் கவிதையும் உள்ளது. **'த்யூதேபன:ப்ரணய கேளிஷு'** என்று தொடங்கும் நான்காம் அங்கம் இருபதாவது சுலோகம் அதில் உள்ளது. ஹனுமந் நாடகம் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். ஆதலின் அதற்கு முன்னைய படைப்புத்தான் குந்தமாலா என்பதில் ஐயமில்லை.

## குந்தமாலாவும் உத்தர ராமசரிதமும்

குந்தமாலா சீதையின் வனவாசத்தையும் இராமனின் பிரிவுத் துயரையும் கூறும் நாடகமாகும். இதே கதைப்பொருள் கொண்ட மற்றொரு சிறந்த நாடகம் பவபூதியின் உத்தரராம சரிதமாகும். குந்தமாலா எளிமையும் இனிமையும் உடைய நடையில் படைக்கப்பட்ட நாடகம். உத்தர ராம சரிதம் பாண்டித்தியம்மிக்க செறி வும் ஆழமும் உடைய நடையுடைய நாடகம். இவ்விரு நாடகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து பல விமரிசனங்கள் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் திங்நாகர் முதலாமவரா? பவபூதி முதலாமவரா? யார் யாரைப்

பின்பற்றினார்கள்? அவர்களது காலம் யாது என்பன குறித்து ஆய்வுகள் பல உள்ளன. சிலர் திங்நாகரின் குந்தமாலாவே முதற்படைப்பு என்பர். சிலர் பவபூதி உத்தர ராம சரிதமே முதற்படைப்பு என்பர். ஆதலின் இங்கு உத்தர ராம சரிதம் குறித்தும், பவபூதி குறித்தும் தெளிவாக அறிந்து கொள்வது இன்றியமையாதது. வடமொழி இலக்கிய உலகில் காளிதாசனுக்கு அடுத்துக்கூறப்பெறும் பெருங்கவிஞர் பவபூதியாகும்.

பவபூதி உத்தரராம சரிதம், மகாவீர சரிதம், மாலதி மாதவம் எனும் மூன்று சிறந்த நாடகங்கள் இயற்றியுள்ளார். முன்னிரு நாடகங்கள் இராமாயணத்தைச் சார்ந்தவை. மாலதி மாதவம், பெருங்கதையினைச் சார்ந்தது. சோமதேவரின் கதாசரித்சாகரம் க்ஷேமேந்திரனின் பிருகத்கதாமஞ்சரி, பாணரின் காதம்பரியிலிருந்து இக்கதையை உருவாக்கியிருக்கலாம்.

**'ஸ்ரீகண்டபதலாஞ்சன பவபூதிர்நாம'** என்று தன்னைக் குறிப்பிட்டபடியால் இயற்பெயர் ஸ்ரீகண்ட என்றும் சிறப்புப் பெயர் பவபூதி என்றும் கூறுவர்.

பவபூதி விதர்ப்பதேச பத்மபுரத்தைச் சார்ந்தவர். இது நாகப்பூர் அருகே பீகார் பகுதியைச் சேர்ந்த இடம் என்பர். உத்திரராம சரித உரையாசிரியர் கஙசியாமன் இவரைத் தென்னாட்டவர் என்று கருதுகிறார். குமாரிலபட்டரின் 'ஸ்லோகவார்த்திகம்' என்னும் மீமாம்சா சாத்திர நூலுக்கு உரை எழுதிய **உம்பேகர்** என்பவரும் பவபூதியும் ஒருவரே என்றொரு கருத்து உண்டு. பவபூதி மகாராஷ்டிரர் என்றும் ஆந்திரர் என்றும் கூறப்படுகிறது.

கன்யா குப்ஜ அரசனாகிய யசோவர்மனின் அவையில் பவபூதி இருந்தார். இம்மன்னனின் ஆட்சிக்காலம் கி.பி. 725-750 ஆதலின் பவபூதியின் காலம் எட்டாம்

நூற்றாண்டாகும்.

உத்தரராம சரிதமும் குந்தமாலாவும் பலவிதத்தில் ஒற்றுமையுள்ள நாடகங்கள் குந்தமாலாவில் சீதையைக் காட்டுக்கனுப்பிய இராமன், சில காலம் கழித்து வால்மீகி ஆசிரமப்பகுதிக்கு வருகிறான். கங்கைக் கிளைநதியாகிய கோமதியாற்றின் கரையில் இலக்குமணனுடன் இருக்கும்போது அந்த ஆற்றின் துறையில் வெள்ளத்தில் மிதந்து வரும் ஒரு முல்லைப்பூ மாலையைக்(குந்தமாலா) கண்டு இலக்குமணன் அதை எடுத்து வந்து இராமனிடம் காட்டுகிறான். அப்பூமாலையின் நேர்த்தி கண்ட இராமன் இது சீதை கட்டியது போலிருக்கிறது என்று கருதுகிறான். அதன்பின் அப்பூமாலை எங்கிருந்து வருகிறது என்று மேல்நோக்கிச் சென்று வால்மீகி ஆசிரமத்தை யடைகிறான். அப்போது சீதை அவன் கண்களுக்குப் புலப்படாதவாறு மறைந்திருந்து காண்கிறாள். இராமனின் பிரிவுத் துயரை உணர்கிறாள். இந்த உணர்ச்சி மிக்க கட்டத்தை திங்நாகர் அற்புதமாக - கருணை ரசம் ததும்ப வருணித்துள்ளார். இச்சம்பவத்தின் அடிப்படையிலேயே இந்நாடகத்துக்கும் குந்தமாலா (முல்லைப்பூமாலை) என்றும் பெயரிட்டுள்ளார். உத்தரராம சரிதத்திலும் இராமனுக்குப் புலப்படாதவாறு சீதை இருந்ததாக உணர்ச்சி மிக்க பிரிவுத் துயரின் நிகழ்ச்சிகளை விவரிக்கும் கதையமைப்பினை பவபூதியும் புனைந்துள்ளார். வால்மீகி உத்தர ராமாயணத்தில் சீதை இராமனைச் சந்தித்ததும் மண்மகள் ஆதலின் நிலத்துட் புகுந்து மாய்கிறாள். ஆனால் குந்தமாலாவில் சீதையும் இராமனும் மீண்டும் சந்தித்தபின் கலந்து இன்புறுவதாகக் கதை புனையப்பட்டுள்ளது. அது போன்றே உத்தர ராம சரிதத்திலும் சீதையும் இராமனும் மீண்டும் சந்தித்தபின் கலந்து இன்புறுவதாகக் கதை புனையப்பட்டுள்ளது. அது போன்றே உத்தர ராம சரிதத்திலும் சீதையும் இராமனும் மீண்டும் கூடி மகிழ்ந்து வாழ்ந்ததாகக் கதையை இன்பியல் நாடகமாகவே முடித்திருக்கிறார். பல்வேறு உரையாடல்கள், சொல்பிரயோகங்களிலும்

ஒப்புமைகள் இவ்விரு நாடகங்களிலும் காணப்படுகின்றன. இது குறித்து பல அறிஞர்கள் விரிவாக எழுதியுள்ளனர். நடையிலும் கதையமைப்பிலும் இரு கவிஞர்களும் தத்தம் கைவண்ணங்களைக் காட்டி சிறு சிறு மாற்றங்கள் செய்துள்ளனர். பொதுவாக குந்தமாலாவின் தாக்கம் உத்தரராமசரிதத்திலும் உண்டு என்றே பல அறிஞர்கள் நிர்ணயித்துள்ளனர். உத்தரராமசரிதத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்த நேலடூருராமதாசய்யங்கார் அவர்கள் தம் விரிவான முன்னுரையில் குந்தமாலாவுக்குப் பின் வந்ததே உத்தரராமசரிதம் என்பதை விளக்கிக் காட்டி ஒப்புமைப் பகுதிகளையும் காட்டியுள்ளார். குந்தமாலா நாடகத்தினைப் பிற்காலக் கவிஞர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். போஜதேவர் தமது **'சிருங்காரப்பிரகாசிகா** 'என்ற நூலில் **'த்யூதே பண: சிருங்கார கேளிஷு'** 'என்ற சுலோகத்தை எடுத்துக்காட்டியுள்ளார். சாஹித்யதர்ப்பணம் எனும் நூலைப் படைத்த விசுவநாதர், காவ்ய காமதேனு எனும் நூலைப் படைத்த பகுரூபமிஸ்ரர் முதலியவர்கள் குந்தமாலா நாடகச் சுலோகங்களை எடுத்துக்காட்டுகளாகக் கையாண்டுள்ளனர். குந்தமாலா, உத்தரராமசரிதம் போன்றே மிகு புகழ் பெற்ற நாடகமாகும். கல்கத்தா-சமஸ்கிருத கலாசாலை வெளியீடாக காளிகுமாரதத்தாவின் ஆங்கில மொழி பெயர்ப்புடன்கூடிய நூல் 1964ல் வெளிவந்துள்ளது. ஜகதீசசாஸ்திரி அவர்கள் சமஸ்கிருத வியாக்கியானத்துடன் வேதவியாச, பாசமீ பண்டிதர் ஆங்கிலதில் மொழி பெயர்த்து 1932ல் வெளிவந்துள்ளது. பஞ்சாப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த **ஏ.சி.கவுல்னர்** அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தெலுங்கில் கட்டிடலட்சுமீநரசிம்ம சாஸ்திரி அவர்களும் டாக்டர் டி. கோடீஸ்வரராவ் அவர்களும் மொழி பெயர்த்துள்ளனர். மற்றும் புலுசு வேங்கடேஸ்வர்லு, ஆகுல ராம சர்மா, கோருகந்து சத்யநாராயணசர்மா ஆகியோரும் மொழி பெயர்த்துள்ளனர். காளிதாசருக்கும் முற்பட்டவராகக் கருதப் பெறும் பாசரின் நாடகங்கள் பதின்மூன்றும் திருவனந்தபுரம்

அரண்மனை நூலகத்தில் மட்டுமே கிடைத்தன. அவற்றை கணபதி சாஸ்திரிகள் 1912-ல் கண்டெடுத்து வெளியிட்டார். அதுபோலவே குந்தமாலா நாடகமும் தஞ்சாவூர் அரண்மனை சரசுவதிமகால் நூலகத்திலிருந்து தான் கிடைத்தது. அதனை முதன்முதலில் மானவல்லி ராம கிருஷ்ணகவி 1923-ம் ஆண்டு கிரந்தலிபி, தெலுங்கு லிபி சுவடிகளைக் கொண்டு வெளியிட்டார். அதன்பிறகு தான் இந்த ஒப்பற்ற நாடகம் வெளி உலகுக்குத் தெரிய வந்தது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட குந்தமாலா நாடகம் இதே நூலக வெளியீடாகத் தற்போது அதன் தமிழாக்கம் வெளிவருவது பொருத்தமுடையதாகும்.

இவ்வரிய நூலைத் தமிழாக்கம் செய்வித்து வெளியிட அனுமதி அளித்த தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் **டாக்டர் மூ. இராசாராம், இ.ஆ.ப.,** அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. **சாமி. சிவஞானம்** அவர்களுக்கும், பதிப்புத் துறை மேலாளர் திரு. **அ. பஞ்சநாதன்** அவர்களுக்கும், தெலுங்குமொழிப் பண்டிதர் திரு. **என். விஸ்வநாதன்** அவர்களுக்கும், வடமொழிப் பண்டிதர்கள் திரு. **என்.ஸ்ரீநிவாசன்** மற்றும் திருமதி **எஸ். இராஜலட்சுமி** அவர்களுக்கும், தமிழ்த்துறைப் பண்டிதர்கள் திருமதி **ச.திலகம்** அவர்களுக்கும், திரு. **ய. மணிகண்டன்** அவர்களுக்கும் இந்நூலை ஒளி அச்சுக் கோப்பு மற்றும் ஒளி அச்சு செய்த **திரு. க.பத்மனாபன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாள்: 26.3.2000
தஞ்சை.

**மு.கு. ஜகந்நாதராஜா.**

•••••

# குந்தமாலா

இந்திரன் மணிமுடி மந்தார மாலைப்
பூந்தேன் அளைந்த புனித முடைய,
பந்தகக் கடலைப் பருகும் ஏரம்பன்
சந்த மலரடித் துகள்பணி வோமே!

(வாழ்த்து முடிவில் இயக்குநன் வருகிறான்)

**இயக்குநன்:-**

பக்குவமுடைய உள்ளொளியாகிய தவப்பிழம்பு மேலெழுந்து சுடர் போலப் பரந்தது போன்றும், கங்கை நீரலைகளும் பாம்பும் வசிக்கும் புற்றும் திருமகளும் போன்றுள்ளதும், மாலையில், நனைந்த தாமரைத் தண்டின் குளுமையும் மென்மையுமுடைய பிறைமதி சூடியதும் இளஞ்செஞ்சுடர் வண்ணப் பொலிவுடையது மாகிய சிவபெருமான் செஞ்சடை நம்மைக் காக்குமாக!

அரளாபுரியில் வசிக்கும் கவிஞன் திங்நாதனின் படைப்பாகிய குந்தமாலா என்னும் (நாடகத்தை) நடித்துக் காட்டு மாறு அவையோர் பணித்துள்ளார்கள்.

ஆகையால், நாடக அரங்கேற்றத்திற்குத் துணை புரியுமாறு ஆரியை (ஐயை)யை அழைத்து அரங்க ஏற்பாடுகள் செய்கிறேன்.

[திரையில்]ஆரியே! (அம்மா) இங்கே! இங்கே இறங்குக!

**இயக்குநன்:-** அடே யார் இது! ஆரியையை அழைப்பதில் எனக்குத் துணை நிற்பதாகத் தெரிகிறது!

[பார்த்து] அடடா! அந்தோ! மிகவும் இரங்கத் தகுந்ததாயிருக்கிறது!

இலங்கை வேந்தன் பவனத்தில்* நெடுநாள் இருந்தாள் என்பதற்காக, உலக நிந்தைக்குப் பயந்து இராமனால் ஊரைவிட்டு வெளியேற்றப் பட்ட நிறை கர்ப்பிணியாகிய சீதையை வனத்தில் விட வந்த இலட்சுமணன் இவன்.

[செல்லுகிறான்]

*முன்னுரை(பிரஸ்தாபனை)*

**குந்தமாலா**

*முதல் அங்கம்*

[அப்போது தேரில் ஏறி சீதையும், லட்சுமணனும் தேரோட்டியும் வருகின்றனர்]

**இலட்சுமணன்:-** இங்கே இங்கே இறங்குங்கள் ஆரியே! (அம்மா), செறிந்த மரஞ்செடிகொடிகளால் தடைபட்டுத் தேர் புகுதற்கரிய கங்கைக் கரைக் காடுகள் இவை: ஆதலின் ஆரியே! இறங்குங்கள்!

**சீதை:-** குழந்தை லட்சுமணா! விரைபரித் தேரினால் நடுங்கும் என்னுடலை சரிப்படுத்தி உட்காருவதே பெரும்பாடாயிருக்க கீழே இறங்குவதெப்படி?

**இலட்சுமணன்:-** சுமந்திரா! குதிரைகளைக் கடிவாளத்தால் கட்டுப்படுத்த முயற்சி செய்!

**சுமந்திரன்:-** கட்டுப்படுத்த முயன்றும் கூட இசை நாட்டம் உடைய குதிரைகள் மட்டு மீறிச் செல்கின்றன, செவிக்கினிய அன்னங்களின் மெல்லோசையால் ஈர்க்கப்பட்டு, நிலைகெட்டுக் கட்டுமீறிக் குதிரைகள் மிக விரைவாகச் செல்கின்றன.

---

*பவனத்திலிருந்ததால் இப்போது வனத்திற்கு வரவேண்டியுள்ளது என்ற நயம் காண்க.

**இலட்சுமணன்:**- சுமந்திரா! மிகவிரைவாகச் செல்வதால் மேடுபள்ளங்கள் கூடத் தெரியவில்லை, குதிரைகள் தேரைக் கங்கையில் வீழ்த்தி விடலாம், ஆகையால் முழுமூச்சுடன் முயன்று நிறுத்துக!

**சுமந்திரன்:**- [கடிவாளக் கயிற்றை இழுத்துப் பிடிக்கிறான் ]

**இலட்சுமணன்:**-*இதோ! தேர் நின்றது, தேவி இறங்குவீராக!

***சீதை:***- [ இறங்கி மெல்ல நடக்கிறாள் ]

**இலட்சுமணன்:**- சுமந்திரா! நெடுந்தொலைவு வந்ததால் குதிரைகள் களைத்துப் போயின, அவற்றை இளைப்பாறச் செய்!

**சுமந்திரன்**:- ஆணைப்படியே! [தேரை ஓட்டிச் செல்கிறான்]

**இலட்சுமணன்:**- [நடந்து தனக்குள்] ஆரியன் (அய்யன்) - அன்று-அரசனால் கட்டளையிடப் பட்டிருக்கிறேன், " வத்ஸ! வக்ஷ்மணா! இராவணன் பவனத்தில் இருந்ததால் தேவி சீதையின் கற்பினைக் குறித்துப் பலர் பலவிதமாக விமரிசித்துப் பழி தூற்றிப் பேசிக் கொள்கின்றனர், சீதையின் பொருட்டு சரத்கால சந்திரனைப் போன்ற தூய இக்ஷ்வாகு குலத்தின் பெருமைக்கு இழுக்கு ஏற்பட விடமாட்டேன், சீதையும் என்னிடம் கர்ப்பிணிகட்கியல்பான ஆசை (வயா)யால் கங்கை காட்சியைக் கோரினாள். ஆகையால் நீ அவளை கங்கையைக் காண அழைத்துச் செல்வது போலச் சென்று, சுமந்திரனுடன் தேரில் கொண்டுபோய் - காட்டில் எங்கேனும் விட்டு விடு

---

*இலட்சுமணன், தேர் ஓடும்போதே சீதையை இறங்குமாறு முதலில் கூறியது அவனது மனக் குழப்பததைக் காட்டுகிறது,

என்று பணிக்கப்பட்டுள்ளேன். நானும் உறவினன் என்ற முறையில் ஐயம் சிறிதுமின்றி நம்பிவந்த தேவியை, வளர்த்த மானை வதைக்குமிடத்திற்குக் கொண்டுசெல்வது போல வனத்திற்கு அழைத்து வந்துள்ளேன்.

**சீதை:-** குழந்தாய் (வத்ஸ) லட்சுமணா! நிறைமாத கர்ப்பச் சுமையால் கால்கள் தள்ளாடுகின்றன. ஆகையால் முன்வந்து புனித கங்கை இன்னம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்று பார்த்துச் சொல்.

**இலட்சுமணன்:-** இதோ புனித கங்கைக் கருகிலேயே வந்துவிட்டோம். சிறிது பொறுத்துக் கொள்ளுங்கள் சேர்ந்து விட்டோம்.

தாமரைப் பூக் காட்டின் பூந்தாதினை அளாவி, மிக இனிய அன்னங்களின் ஓசையைக் கொணர்ந்து குளிர்ந்த அலை நீர்த்துளிகள் சிதறி வரும் கங்கைக் காற்று, தங்களை வரவேற்று உபசரிப்பது போல மெல்லத் தவழ்ந்து வீசி வருகிறது.

**சீதை:-** [பரிசம் அடைகிறாள் ]

தாயின் மென் கரங்கள் தழுவுவது போல, இனிய குளிர்ந்த கங்கை நீரலைக் காற்று, தழுவலால், களைப் போடு கூடப் பாவங்களும் களைந்து போய்விட்டது. எனினும், உந்தும் குதூகலத்தால், கங்கையைக் காணும் வேட்கை மிகுகின்றது. ஆதலின் களைந்துப் போன நான் இறங்கத்தகுந்த துறையைக் காட்டுவாயாக!

**இலக்:-** [காட்டி] மனித சஞ்சாரமதிக மின்மையால் இவ்விடம் இறங்குவதற்குக் கடினமாக இருக்கிறது. ஆகையால் கால் ஊன்றி வைத்து பார்த்து வாருங்கள். வலது கரத்தால் வானீரக் கொடியிணைப் பற்றி, இடது கரம் முழங்காலில் ஊன்றி என் அடிமேல் அடிவைத்து மெல்ல மெல்ல இப்போது என் பின்னே வாருங்கள் அம்மா!

**சீதை:-** [ சொன்னபடியே இறங்கி ] குழந்தாய்! மிகவும் களைத்துப் போனேன். இம் மர நிழலில் சிறிது நேரம் அமர்ந்து இளைப்பாறிக் கொள்கிறேன்.

**இலக்:-** தேவியின் திருவுளப்படியே

**சீதை:-** [அமர்ந்து ஓய்வுகொள்கிறாள்]

**இலக்:-** அலைகள் நீர்த்துளிகளை எறியக் குளிர் காற்று வீசுகிறது. இனிய குரல் எடுத்து அன்னங்கள் இசைபாடுகின்றன. இந்நிழல், தோழரைப் போல மார்புறத் தழுவி இன்புறுத்துகிறது: இவ்வனம் ஆட்கள் இல்லாவிட்டாலும் கூட பரிசனங்கள் (குற்றேவலர்கள்) போலவே உபசரிக்கின்றது.

**சீதை:-** குமரன் சொல்லியது போல உறவினர்களுக்கிடையே இருப்பது போல என் மனம் மிகவும் மகிழ்ச்சியுறுகிறது.

**இலக்:-** [தனக்குள்] தேவி களைப்பாறி நலமுடன் அமர்ந்துள்ளாள், உண்மை நிலையைச் சொல்வதற்கு இது தான் ஏற்ற தருணம். [வெளிப்படையாக ] [துணிந்து காலில் வீழ்ந்து வணங்கி]நிரந்தரப் பிரிவுத் துன்பத்திற்குரியவனாகிய, லட்சணமில்லாத லட்சுமணன் விண்ணப்பிக்கின்றேன்:- மனதைதிடப்படுத்திக் கொள்ளுங்கள்.

**சீதை:-** [ முழுபரபரப்புற்று ] அண்ணல் நலந்தானே?

**இலக்:-** [காட்டைக் காட்டி ] இந்தநிலையில் அண்ணலுக்கு நலம் எவ்விதம் கிட்டும்?

**சீதை:-** தாய் கைகேயி மீண்டும் வனவாசத்திற்கு ஆணையிட்டாளா?

**இலக்:-** வனவாசத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் மீண்டும் தாயால் அல்ல.

**சீதா:**- பின் யாரால் மீண்டும் ஆணையிடப்பட்டது.

**இலக்:**- அண்ணலால் தான்!

**சீதா:**- எப்படி ஆணையிட்டார்?

**இலக்:**-[கண்ணீரை அடக்கிக்கொண்டு ]
அண்ணலின் ஆணையிதுவென்று சொல்லிவிட முயல்கின்றேன். ஆனால் சொற்களோ நெஞ்சிற்புதைந்து போய் வெளிவர மறுக்கின்றது.

**சீதா:**- என்ன? எனக்கு வனவாச ஆணையா?

**இலக்:**-தங்களுக்கு மட்டுமல்ல! எனக்கும் தான்!

**சீதா:**-அதெப்படி?

**இலக்:**- நண்பர்கள் புடைசூழ தனதில்லத்தில் வேள்வி செய்து விருந்துண்டு களிக்கும் இனிய இல்லத்தில் இருந்தாலும் கூட அண்ணலுக்கும் தங்கள் பிரிவால் வனவாசம்தான்.

**சீதை:**-குழந்தாய்! தெளிவாகச் சொல்! எனது வனவாசம் அண்ணல் வனவாசம் என்று சொல்கிறாயே!

**இலக்:**-நிர்ப்பாக்கியவானாகிய நான் வேறென்ன சொல்ல முடியும். ஒழுக்கமும் உயர்பண்புமுடைய அண்ணலால் தாங்கள் கைவிடப்பட்டுள்ளீர்கள். தங்களை இக் காட்டில் விட்டு விட்டு நானும் போக வேண்டும்.

**சீதை:**- அந்தோ! அய்யா கோசலாதிபா! இப்போது என்னை வெறுத்துவிட்டார்களா? [மயக்கமுறுகிறாள்]

**இலக்:**-[பரபரப்புடன்] அந்தோ! இடிபோன்ற கொடிய பிரிவுச் செய்தியைக் கேட்டதுமே தேவி உயிர் போய்விட்டது.

[ஆராய்ந்து] மூச்சு இருக்கிறது. உய்வதற்குரிய உபாயம் ஒன்றும் புரியவில்லை [வருந்துகிறேன்] ஆச்சரியம்! ஆச்சரியம்! கங்கை நீர்த்துளிகளின் குளுமையடைந்து மெல்லிய காற்றால் எனது தவப்பேற்றால் தேவி, மன்னர்மகள், எப்படியோ உணர்வு வரப் பெற்றாள்!

**சீதை:**-குழந்தாய்! லட்சுமணா. போய்விட்டாயா?

**இலக்:**-இந்த துர்ப்பாக்கியசாலி இங்கேதானிருக்கிறேன். ஆணையிடுங்கள்.

**சீதை:**- எந்தப் பழியால் நான் புறக்கணிக்கப்பட்டேன்?

**இலக்:**-தேவியைப் பழிப்பதுமுண்டோ?

**சீதை:**- அந்தோ! பாக்கியமற்றவள் நான்! பழியின்றி யும் கைவிடப்பட்டுள்ளேன்! அவரது செய்தி ஏதேனும் உண்டோ?

**இலக்:**- உண்டு.

**சீதை:**-சொல்! சொல்!

**இலக்:**-இணையான குலத்தவள் என்றும், படி சொற்கடவாத பாவை என்றும் உயர் குணத்தவள் என்றும் சுகதுக்கங்களில் என்றும் இணைபிரியாத கற்புடைச் செல்வி என்றும் நான் அறிவேன், மக்கள் பழிச்சொற்கு பயந்து மட்டுமே, சீதை! உன்னைக் கைவிட நேர்ந்தது! வேறொரு குற்றமும் இல்லை, என்பது அண்ணல் செய்தியாகும்.

**சீதை:**- பழிச் சொற்களுமுண்டோ? என்பால் எப்பிழை கண்டு பேசுகிறார்கள்?

**இலக்:**- அம்மையிடம் எப்படிச் சொல்வது?

முனிவர்களும் திக்பாலர்களும் தெய்வங்களும் அண்ணலும் நானும் காண எமக்கு முன்னர் அக்னியில் பரிசுத்தம் ஆனீர்கள். ஆனால்

**சீதை:**- [நாணமுறுகிறாள்] சொல்! என்ன?

**இலக்:**- உலகம் கட்டுப்படாததல்லவா?

**சீதை:**- அக்னிபரிசுத்த வார்த்தையால் விஷயம் புரிகிறது. இராவண பவனச் செய்தி மீண்டும் என் உள்ளத்தை வருத்துகிறது, பெண் என்ற காரணத்தால் சீதையைக் கூட உலகம் இப்படிக் கருதுகிறது. என்னே பெண் பிறவி! இப்படிக் கைவிடப் பட்டுள்ளேன்! உண்மையாகவே கைவிடப்பட்டுவிட்டேன். அண்ணல் கைவிட்டதனாலேயே நான் உயிர்துறப்பது தகுந்த தன்று போலும்! அன்பற்ற, அவனைப் போன்ற இந்தக் கருவினைத் காப்பாற்ற வேணும், பழி முள் குத்தும் துயர் வாழ்க்கையைப் பேணுகிறேன்.

**இலக்**:-அருளப்பெற்றேன் [எழுந்து வணங்குகிறான்] அண்ணல் மற்றொன்றும் கூறுமாறு பணித்தான்.

**சீதை:**- என்னவோ?

**இலக்:**-தேவி! நீயே என் உள்ளத்துறையும் இல்லத்தெய்வம் ஆகும். கனவில் வரும் அமளியிடைத் தோழி நீயே! மற்றொரு மனைவியை நினையாத விரதத்திற்கு ஏற்ப, வேள்வியின் போதும் உனது பிரதிமையையே தருமபத்தினியாகக் கொள்வேன்.

**சீதை**:-அண்ணலின் இந்தச் செய்தி என் கைவிட்ட துன்பம் முழுவதையும் துடைத்தெறிந்து விட்டது. கனவன் பிற பெண்டிரை நயந்தால் பெண்களுக்கு ஏற்படும் துயரைப்

போல★ பெண் பிறரை நயத்தால் ஆடவர்க்கு ஏற்படாதன்றோ?

**இலக்:**-மாற்றுச் செய்தியுண்டோ?

**சீதை:**- யாருக்கு?

**இலக்:**-அண்ணலுக்கு.

**சீதை:**- இப்படியான பிறகும் செய்தியனுப்பவா? தாயாரிடம், பாதுகாப்பின்றிக் கொடும் விலங்குகளுக்கிடையில் காட்டில் வாழும் சீதையை மறந்து விடாமல் அருள்வீராக. என்று நான் காலில் வீழ்ந்து பணிந்து கூறியதாகச் சொல்க!

**இலக்:**-ஆணையைச் சிரமேற் கொண்டேன்! அண்ணனுக்குச் செய்தி யொன்றும் இல்லையா?

**சீதை:**- அருளிலாதவனுக்கு இலட்சுமணன் மூலமாகச் செய்தி அனுப்பும் துர்ப்பாக்கியசாலி யாகிவிட்டேன் நான், நான் சொன்னதாக அந்த ஆளிடம் கூறுக. நற்பேறில்லாதவளை நினைந்து வருந்தி, வருணாசிரம தரும பரிபாலனக் கடமையில் ஆர்வம் இன்றி தன்னைத் தானே வருத்திக் கொள்ள் வேண்டாம். சத்தருமத்திலும் (நல்லறத்திலும்) தன்னுடலைப் பேணுவதிலும் அலட்சியமாக இருக்கவேண்டாம். (விழிப்புடன் இருக்கவும்) குழந்தாய் லட்சுமணா! மாமன்னரை நிந்திக்கிறேனா?

★இக் கருத்து இந்திய மரபுக்கோ, சீதையின் பாத்திரப் படைப்புக்கோ ஏற்றதாக இல்லை. ஹரதத்த சர்மா, இக்குறைபாட்டைச் சுட்டிக் காட்டியுள்ளார். இடைச் செருகலாக இருக்கலாம். எனினும் ஒரு பெண் பிறனை நயந்தால் அவள் கணவன் அவளை நீக்கி வேறொரு பெண்ணை மணக்க முடியும் ஆதலின் அதிகக் கவலைப்பட மாட்டான் ஆடவன். ஆனால் பெண் ஒரே கணவனுடன் கூடி வாழ வேண்டியவள் ஆதலின் தன் கணவன் பிற பெண்டிரை நாடும் போது மிகுந்த கவலையும் பொறாமையும் அடைவாள்.

**இலக்:**-தேவிக்கு இந்த அளவு உரிமையில்லையா?

***சீதை***:-அந்த ஆளிடம் இதுவும் கூறு. குற்றமற்றவளை உன் இதயத்திலிருந்து விலக்குவது தகாததென்றால் இனி நாட்டிலிருந்து விலக்குவது என்னமுறை? என்றும் கூறு.

**இலக்:**- அண்ணனுக்குச் சொல்ல வேண்டியதையே சொன்னீர்கள், வீட்டிலிருந்தன்று. நாட்டிலிருந்தே வெளியேற்றியது இதயத்திலிருந்த திருமகளைத் திருமால் துறந்தது போலன்றோ?

***சீதை:***- இதுவும் கூட என்சொற்களாகக் கூறுக: அந்த தபோவனவாசி, சூலுற்றவள், அஞ்சலி செய்து நெடுநாள் பழகியவள் என்றோ, அனாதை என்றோ, சீதை என்றோ சிந்தையால் மட்டுமாவது அருளத்தக்கவள். என்று விண்ணப் பிக்கவும்.

**இலக்:**- அம்மா! இச்செய்தியைக் கேட்டதும் புண்பட்ட இடத்தில் புளிப் பெய்தாற் போல, அண்ணல், அடக்க முடியாத சோகத்தினால் துன்புறும் நிலையை அடைவான்.

***சீதை***:- இப்பரந்த தனது நாட்டில் இந்தகைய துயர காலத்தில் துணை நிற்பார் நின்னையன்றி யாருளர்? தற்போது என்னைவிட்டால் நீ மட்டுமே இவ்விதம் (அவனைப்பற்றி) கவலைபடுவாய்! நினது தமையன் உடல் நலத்தில் விழிப்போடு பேணற்குரியவன் நீதான்!

**இலக்**:- பெருந்தகைமை வாய்ந்த தங்கட்கிது தகுந்ததே!

***சீதை***:-குழந்தாய் லட்சுமணா! வணங்கிக் கூறுக. ரகுகுல ராஜதானி அயோத்தித் திருமகளுக்கு அஞ்சலிக்கிறேன்,

பிரதிமையாக அருளும் மகாராஜா (தசரதன்) விற்கு வேலை செய்க. தாயார் இடும் கட்டளைகள் தலைமேற்கொள்க. இனிய சொற்களுடைய என் தோழிகளை தேறுதல் கூறுக. துர்ப்பாக்கியசாலியாகிய என்னை என்றும் மறவாது நினைத்துக் கொள். [ என அழுகிறாள்]

**இலக்:**-[உணர்ச்சி தூண்டப்பெற்று] அம்மையினை என் கரங்களால் வனத்தில் விட்டுச் செல்லவும், அவளுடைய புலம்பலைக் காதுகளால் கேட்கவும் செய்து, இலங்கைப் போரில் இன்பமுடன் இறந்த என்னை உயிர்த்தெழச் செய்து அனுமன் பகைவனானான். [பார்த்து] புல் மேய்வதை விட்டு மான்கள் அழுகின்றன. அன்னங்களும் துக்கத்தால் இரங்கியழுகின்றன. தேவியைக் கண்டு மயில்களும் நடமிடலை விடலாயிற்று. மனிதர்களை விட விலங்குகள் (அஃறிணை) சிறந்தவையன்றோ?

**சீதை**:-குழந்தாய் லட்சுமணா! பொழுது சாய்கிறது. தொலைவிலும் மனிதர்கள் நடமாட்டம் இல்லை. பறவைகள் கூடுகட்குத் திரும்புகின்றன. காட்டு விலங்குகளின் சஞ்சாரம் தொடங்குகிறது. காலம் தாழ்த்துதல் கூடாது. செல்க.

**இலக்**:-[வணங்கி] வஞ்சகனாகிய இலட்சுமணனின் அஞ்சலிகள்: ஏற்றுக் கொள்க! அம்மா! கவனமாகக் கேளுங்கள்.

**சீதை:**- எப்போதும் கவனமாகவே நானிருப்பேன்.

**இலக்:**- அண்ணல், நட்பு, சுற்றங்களை நினைந்தாவது, வருத்தத்தால் உயிர் போக்கிக் கொள்ளக் கூடாது. கருவிலிருக்கும் இக்ஷ்வாகு குலக்கொழுந்தினை தேவி முயன்று பாதுகாக்க வேண்டும்.

**சீதை**:-சௌமித்திரியின் சொற்கள் கடத்தற்கரிது.

---

சௌமித்திரி - சுமத்ரையின் மகன் - (சுமத்ரா - நன்னட்பு)

**இலக்**:- மற்றொரு விண்ணப்பம்

***சீதை:-*** *என்ன அது?*

**இலக்:**- மூத்த அண்ணலின் ஆணையால் ஆளரவமற்ற காட்டில் கொண்டுவிடும் ஒரே குற்றத்தைச் செய்த என்னை மன்னித்தருள வேண்டும்.

***சீதை:-*** [பரபரப்புற்று] அண்ணல் சொற்படி நடக்கும் நின்னைக் கண்டு மகிழ்வதன்றி குறை கூறுவதுண்டோ?

**இலக்:**- [வணங்கி வலம் வருகிறான்]

***சீதை:-*** [அழுகிறாள்]

**இலக்:**- [நாற் திசையும் நோக்கி] ஓ! லோகபாலகர்களே! கேளுங்கள்! கேளுங்கள்! மகாரதன் தசரதனின் மருமகள் இவள்.

***சீதை:-*** மிகு சிறப்புடைய சொற்களைக் கேட்கிறேன்.

**இலக்**:-மது சூதனனாகிய ராமனின் இல்லத்தரசி.

***சீதை:-*** எனக்கெப்படி அந்த பாக்கியம் கிட்டும்?

**இலக்:**- கணவனில்லத்திலிருந்து வெளியேற்றப்பட்டவள்

***சீதை:-***[காதைப் பொத்திக்கொள்கிறாள் ]

**இலக்:**- ஆளற்ற இக்காட்டில் தனித்துறைபவளைக் காப்பீராக! இவளைப் பாதுகாப்பீராக

---

லோக பாலர்: எட்டுத்திசைகளிலும் இருந்து காக்கும் இந்திராதி தெய்வங்கள்

**சீதை:-** [கருவினைக் காண்கிறாள் ]

**இலக்:-** அம்மையின் பொருட்டு பகவதியைப் பிரார்த்தனை செய்கிறேன்.

தேவி, களைப்புற்ற போது, அலை தழுவித் தாமரைத் தாதளைந்த மென்காற்றால் வீசி, நீ அருள்தல் வேண்டும். தேவி துறையிறங்கி நீராட வரும் போது! கங்கையே! சிறிது நேரம் நின் நீர்ப் பெருக்கின் வேகத்தைக் கட்டுப் படுத்து வாயாக!

இக் காட்டில் வசிக்கும் முனிவர்களே! உங்கட்கு தலைவணங்கி விண்ணப்பித்துக் கொள்கிறேன். பெண் என்றோ, கைவிடப்பட்டவள் என்றோ, அடைக்கல மற்றவள் என்றோ, குலமகள் கருதியாவது தேவி எக்காலமும் உங்களால் அருளப்பட வேண்டியவள். வனதேவதைகளே! அஞ்சலி செய்து விண்ணப்பிக்கின்றேன். ஒருகணம் கவனமாகக் கேளுங்கள்! உங்கள் தோழி தூங்கும் போதோ, ஆபத்து நேரும் போதோ, துன்புறும் நேரங்களிலோ, முயன்று நீவிர் கண்காணித்துப் பாதுகாப்பீராக.

ஓ! ஓ! கொடிய காட்டு விலங்குகளே! தேவியின் பொருட்டு நீங்கள் தூர விலகிச் செல்லுங்களோ! மீண்டும் வராதீர்! மான்களே! மான்களே! தோழியின் பிரிவு காலத்தில் நீங்கள் துணையிருந்து ஒருசிறிதும் அகலாதிருங்கள்.

நதிகளே தோழிகள்! லோக பாலகர்களே உடையவர்கள். கங்கையே தாய்! மலையரசனே சகோதரன். மீண்டும் மீண்டும் இலட்சுமணன் வேண்டுகிறேன். மன்னர் திருமகளை முயன்று பாதுகாப்பீர்களாக. நான் செல்கிறேன்.

[வணங்கிச் செல்கிறான்]

***சீதை:***- என்னைத் தனியாக விட்டுவிட்டு உண்மையாகவே இலட்சுமணன் சென்றுவிட்டானா? [பார்த்து] அந்தோ! பொழுது சாய்ந்துவிட்டது. இலட்சுமணன் குரல் கூட கேட்கவில்லை. மான்கள் தன் இடங்களுக்குச் செல்கின்றன. பறவைகள் கூடுகளுக்குப் போகின்றன. இருள் படிந்து பார்வை மங்குகிறது. [கொடும் விலங்குகள் திரிகின்றன] ஆள் அற்ற பெருங்காடு. துர்ப்பாக்கியசாலியாகிய நான் என்ன செய்வேன்? பழக்கமற்ற இடத்தில் திக்கற்றவளாக இருக்கிறேன். நான் என்ன பாவம் செய்தேனோ இத்தகைய பிரிவுத்துயர் எப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்: இலட்சுமணனால் வேண்டப்பட்டும் வன தேவதைகள் கண்முன் வரக்காணோமே? ரகுகுல மரபில் வரும் வசிஷ்டர் வால்மீகி முதலிய முனிவர்கள், நெஞ்சலர அஞ்சும் என்னைக் காக்க வரவில்லையே! எங்குள்ளனரோ?

[மயக்கமுறுகிறாள்]

[அப்போது வால்மீகி வருகிறார்]

***வால்மீகி:***-கங்கை யபிஷேக ஜலம் கொணர மாலையில் வந்த முனி குமாரர்கள் " யாரோ தனித்து அனாதையாகக் காட்டில் அழுதுகொண்டிருக்கும் கர்ப்பவதியான ஒரு பெண்ணைக் கண்டோம் " என்று கூறக் கேட்டு விரைந்திங்கே நான் வந்துள்ளேன். ஆதலின் அவளைத் தேடுகிறேன். [தேடுகிறார்]

***சீதை:***- [உணர்வுற்று] யார் எனக்கு விசிறுவது? [ஆலோசித்து ] யாருமில்லை. இலட்சுமணனின் முறையீட்டைக் கேட்ட கங்காதேவி அலைக்கரங்களால் என்னை அருள் பாலிக்கின்றாள்,

***வால்:***- இக் காரிருட்டில் கண்களுக்கொன்றும் புலப்படவில்லை. ஆதலின் குரல் கொடுத் தழைக்கின்றேன். ஓ! நான் தான்.

***சீதை:***-[மகிழ்ச்சியுடன்] குழந்தை இலட்சுமணா? திரும்பி வந்தாயா?

**வால்:**- நான் இலட்சுமணன் அல்ல.

**சீதை:**- [முகத்திரை மூடி] [அமங்கலம்! அமங்கலம்! இவன் யாரோ பிற ஆடவன். இந்த ஆபத்திலிருந்து எப்படி மீள்வேன்] [ஆலோசித்து]அய்யா! அபலை! தனித்துள்ளேன்.

**வால்:**-இதோ இருக்கிறேன்! குழந்தாய்! பிற ஆடவன் என்னும் ஐயம் வேண்டாம். தவமுனிவன் நான். மாலையில் அந்திக்கடன் ஆற்ற வந்த முனி குமாரர்கள் உன்னை பற்றிக் கூறக் கேட்டு உனக்குதவ வந்துள்ளேன். அம்மா! உன்னை ஒன்று கேட்கிறேன்.

அறத்தாற்றில் நின்று போர்களில் வென்று இவ்வுலகம் புரக்கும் இராமனது அரசாட்சியில் துழந்தாய்! உனக்கெப்படி இந்த விபத்து நேர்ந்தது.

**சீதை:**- அந்த பூரணச்சந்திரனாலே தான் பேரிடி வீழ்ந்தது.

**வால்:**- விரும்பத் தகுந்த இராமனாலேயா இந்த விபத்து ஏற்பட்டது.

**சீதை:**- ஆம்!

**வால்:**- வருணாசிரம தருமத்தை நிலைநாட்டும் மாமன்னனால் வெளியேற்றப் பட்டாயானால், - உனக்கு நலன் விளைக- நான் போகிறேன்.[செல்ல முனைகிறார்]

**சீதை:**-நான் ஒன்று விண்ணப்பிக்கின்றேன்.

**வால்:**- சொல்!

**சீதை:**- ரகுபதியால் வெளியேற்றப்பட்டவள் என்று தாங்கள் அருள் கூறவில்லை என்றாலும் - ரகு, சகர, திலீப, தசரத மகா

சக்ரவர்த்திகளின் சந்ததி (மரபு)யாகிய குலக்கொழுந்து என் வயிற்றில் உள்ளதென்றாவது அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

**வால்:-** [நின்று] [என்ன, இக்ஷ்வாகு மரபினைக் கூறுகிறார். தெரிந்து கொள்வோம்] மகளே! தசரதனின் மருமகளா!

***சீதை:-*** பகவான் எண்ணியபடியே

**வால்:-** மிதிலை மன்னன் ஜனகனின் மகளா?

***சீதை:-*** ஆம்!

**வால்:-** சீதையா?

***சீதை:-*** சீதையல்ல! பகவான்! துர்ப்பாக்கியசாலி!

**வால்:-** அந்தோ! பேறிலாதவன் ஆனேன். என்ன குற்றம் செய்தாய் என்று இந்த தண்டனை?

***சீதை:-*** [நாணம் உறுகின்றாள் ]

**வால்:-** என்ன! நாணம் உறுகின்றாள். ஆகட்டும்! என் யோக (ஞானக்) கண்களினால் பார்க்கின்றேன்.[தியானித்து] குழந்தாய்! மக்களின் பழிச் சொற்கஞ்சி இராமன், உன்னைத் துறந்தானே யன்றி இதயத்தால் அன்று. நிரபராதியான உன்னை நாங்கள் கைவிடமாட்டோம். வா! ஆசிரமத்துக்குப் போவோம்.

***சீதை:-*** தாங்கள் யாரோ?

**வால்:-** கேட்பாயாக! நான் ஜனக மன்னனின் நெடுநாளைய தோழன். தசரத மன்னனின் பாலிய நண்பன். பிற ஆடவன்

எனும் ஐயம் விட்டொழி! உனக்கு நான் தந்தையாவேன்! மாமனும் ஆவேன்! வால்மீகி முனிவன் நான்.

**சீதை:**-பகவன்! வணக்கம்.
**வால்:**-வீரக் குழந்தையைப் பெறுவாயாக! மீண்டும் கணவனை அடைவாயாக!

**சீதை:**-தாங்கள் உலகுக்கு வால்மீகி மகரிஷியாவீர்கள். எனக்குத் தந்தைதான், தங்களுடைய ஆசிரமத்துக்குப் போவோம். [கங்கையைக் கண்டு அஞ்சலித்து] பகவதி பாகிரதி! நான் சுகப் பிரசவமுற்றால் தினந்தோறும் உனக்கு முல்லைப்பூமாலை என் கைகளால் கட்டிக் காணிக்கையாக்குவேன்.
**வால்:**- மிகுந்த இடர்தரும் வழியிது. உனக்கு மிகவும் சிரமமானது. நான் காட்டும் பாதையிலேயே வரவேண்டும். இந்த தருப்பை முள்களில் மெதுவாகக் காலூன்றி வருக: இந்தக் கிளைக்கு வணங்கி, இடது பக்கப் பள்ளத்தைப் பார்த்து, வலது கரத்தால் இந்தத் தூணைப் பற்றிக்கொண்டு வருக! சமதளம் வந்து விட்டது. புனிதமான இந்தத் தாமரைப் பொய்கையில் கால்களைக் கழுவிக் கொள்!
**சீதை:**-(சொன்னபடியே செய்கிறாள்)
**வால்:**- [காட்டி] இதுதான் நமது ஆசிரமம்.

எல்லா ரகுகுல மரபினருக்கும் நாங்கள் தான் பும்சவனம் முதலிய கிரியைகள் செய்தோம். உனது பிரசவத்தைப் பற்றிக் கவலைப் படாதே. கௌசல்யை பாதம் பணிந்து குற்றேவல் செய்த புண்ணியம் இங்குள்ள முது தவ மகளிரால் உனக்குக் கிட்டும். பார்! முனி கன்னிகையர் உனது தோழியரும் உடன் பிறந்தோரும் ஆவார்கள்.

[எல்லேரும் செல்கின்றனர் ]

**முதல் அங்கம்**

குந்தமாலா

## இரண்டாம் அங்கம்

[இரு முனி கன்னியர் வருகின்றனர்]

**முதலவள்:-** தோழி! வேதவதி! நற்செய்தி! உன் இனிய தோழி சீதைக்கு இருகுமாரர்கள் பிறந்தார்கள்!

**வேத:-** மகிழ்ச்சி! மகிழ்ச்சி! என்ன பெயரோ?

**முதல்:-** பகவான் வால்மீகி, பெரியவனுக்கு குசன் என்றும் சிறியவனுக்கு லவன் என்றும் பெயரிட்டுள்ளார்.

**வேத:-** தளர் நடை நடக்கின்றனரோ?

**முதல்:-** தளர் நடையா? மான் மறிகள் எனக் குதித்தோடுகின்றனர். சிங்கக்குட்டிகளோடு போட்டியிடுகின்றனர். தவமுனிவர்கள் இதயத்தைக் கவர்கின்றனர். கண் விருந்தாக அவ் இரட்டையர் பொலிவுறுகின்றனர். முனிவர்கள் மடியிலமர்ந்து மகிழ்ச்சி தருகின்றனர் இப்போது வால்மீகி மகரிஷி எழுதிய இராமாயணம் படிக்கின்றார்கள்.

**வேத:-** இச்செய்தி கேட்டபின், சீதை பாக்கியசாலி என்று தோன்றுகிறது. குசலவர்களின் வளர்ச்சியைக் கண்டு என் தேவி சீதை தன் துன்பத்தை மறப்பாள் என்று கருதுகிறேன்.

**முதல்:-** அப்படியே ஆகுக. நைமிசாரணியச் செய்திகள் என்ன?

**வேத:-** மாமன்னரின் வேள்விக்குரிய முன்னேற்பாடுகள் செய்யப் படுகின்றன. தகுந்த முனிவர்கள் வரவழைக்கப் படுகிறார்கள்.

**முதல்:-** பகவான் வால்மீகி அழைக்கப்பட்டுள்ளாரா?

**வேத:-** இராமதூதன் வால்மீகி ஆசிரமத்திற்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். சீதையைக் காணவேண்டும்! எங்கிருப்பாள்?

**முதல்:-** இங்குதான் சாலமர நிழலில் அமர்ந்து எப்படி காலங் கழிப்பதென ஆலோசித்துக் கொண்டிருக்கிறாள்.

[செல்கின்றனர்]

பிரவேசகம்

[அப்படியே கவலையுடன் சீதை நிலத்தமர்ந்தவாறு தோன்றுகிறாள்]

**சீதை:-** ஆ! இயல்பாகவே கொடுமையான பண்புடைய ஆண்களின் இதயத்தை நம்புதற்கரியதுதான்: தூண் (சுவர்)களில் முதலில் எழுதப்படும் [மேற்கோளாகக் காட்டப்பெறும் ] காதல் தம்பதியரில் வானுலகில் பார்வதி பரமேஸ்வரும், மண்ணுலகில் சீதாராமர்களும் திகழ்வர். அப்படிப்பட்ட புகழ்பெற்றும் இப்போது நிரபராதியாகியும் இத்தகைய துன்பத்தை அனுபவிக்கிறேன். அந்தோ! அண்ணலை என் சொல்வது? முன்பு மென்துகில் இடைப்பட, ஒரே படுக்கையில் இணைந்திருந்தான் இன்று, எத்தனையோ யோசனைத் தூரம் இடைப்படப் பிரிந்துள்ளேன். என்னைப் போல் முழுத்துன்பம் அனுபவிக்கும் பிறவி உலகிலெங்கும் இல்லை அவனுடன் கலந்தின்புறக் கண்ட நிலவு, அவனுடனிருந்து கேட்ட

குயிலிசை, அவனுடன் கூட இருந்தனுபவித்த தென்றல் காற்று. இன்று தனியாகப் பார்த்தும் கேட்டும், அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் போன்றோர்க்கு உயிர் நீத்தால் என்றும் நினைக்க வும் கூடாததொன்று. முன்பு அண்ணல் அருளால் மிதிலை மக்களால் வணங்கத் தகுந்தவளாக இருந்து இன்று இத்தகைய வருந்தத்தகுந்த நிலை ஏற்பட்டிருக்கிறது, இந்த நாணமே பிரிவுத்துயரைவிட அதிகம் துன்புறுத்துகிறது. அப்போது குழந்தைகள் வளர்ந்து விட்டனர். வால்மீகி முனிவர் என்பால் அருளுடன் இருக்கிறார். தபோவன வாசத்திற்கு முரண்பாடான நெட்டுயிர்ப்புகளோடு, பொழுதைக் கழித்தல் தகுந்ததன்று. என் தோழி வேதவதிக்கு குழந்தை பிறந்த செய்தியை அனுப்பவோ, அழைக்கவோ இல்லை, என் மரணப் பிரயத்தினத்திற்கு இதுவே பெருந்தடையாகும்.

[வேத வதி வருகிறாள்]

**வேத:**-தபோதனர்களுக்கு வந்தனோபசாரங்களும், விருந்தோம்பலும் முடிந்தன. சால மர நிழலில் உள்ள தோழி சீதையைக் கண்டு தேறுதல் கூறுகிறேன். [நடந்து பார்த்து] இதோ மிதிலைச் செல்வி. கோடைக்காலத் தளிர்மென் கொடிபோல வாடி வதங்கி, வெளுத்துப்போய் தன் துயர் நிலையைக் காட்டியவாறு மர நிழலில் அமர்ந்துள்ளாள் .[அருகடைந்து] கவலையுடன் கீழ்நோக்கியவாறு, நீண்ட கருங்கூந்தல் கண்களை மூடியபடி இரங்கத் தக்க நிலையில் உள்ளாள். அழைக்கின்றேன். தோழி! வைதேகி!

**சீதை:**-[திடுக்கிட்டு கண்டு] ஓ! இனிய தோழி வேதவதி வந்துவிட்டாள். மகிழ்ச்சி! மகிழ்ச்சி! நல்வரவு [அன்புடன் அணைத்து அமரச் செய்கிறாள்]

**வேத:**- குசலவர்களுக்கு குசலம் தானா?

**சீதை:**-வன வாசிகட்குப் போலவே.

**வேத:**-உனது செய்தி எப்படியிருக்கிறது.

**சீதை:**-[கூந்தலைக் காட்டி]இதைப்படி இருக்கிறது?

**வேத:**- [தனக்குள் ]இந்த இரங்கத் தக்கவள் பிரிவுற்றவள் (வராகி) மிகவும் வருந்துகிறாள். இராமனைப் பற்றிப் பேசி ஆறுதல் கூறுகிறேன்.[வெளிப்படையாக ] ஓ! பேதையே! அந்த அருளிலாதவன் செயலுக்காக தேய்பிறை நிலவு போல இளைத்துப் போகிறாயே என்ன?

**சீதை:**-அவன் அருளிலாதவனா?

**வேத:**- நீ அவனால் கைவிடப் பட்டாயல்லவா?

**சீதை:**- நான் கைவிடப் பட்டேனா?

**வேத:**-[கூந்தலைத் தொட்டு நகைத்தவாறு] அவ்விதம் உலகம் பேசுகிறது. உண்மையாகவே கை விடப்பட்டாய்!

**சீதை:**-உடலால் தான்! உள்ளத்தால் அன்று.

**வேத:**- பிறருடைய உள்ளத்தை எப்படி அறிவாய்?

**சீதை:**- அவனுடைய உள்ளம் சீதைக்குப் பிறருடையதாகுமா?

**வேத:**- துர்ப்பாக்கியசாலியான என் பொருட்டாக சேதுபந்தனம் முதலிய சிரமத்தைத் தாங்கியவனுக்கு அன்பில்லை என்று எப்படிக் கூறுவது?

**வேத:**-தற்புகழ்ச்சிக்காரி! அது க்ஷத்திரியர் (மன்னர்) கட்குரிய பகைவன் (இராவணன்) மேல் ஏற்பட்ட பகைமையாலே தான் தவிர சீதையின் மேல் அன்பினாலன்று.

**சீதை:**- நீ மற்றொன்றைக் காணவில்லை.
**வேத:**- என்ன அது?

**சீதை:-** இது

**வேத:-**என்ன "இது"

**சீதை:-** [நாணமுடன்] பிறபெண்டிரால் தழுவப்பெறாத [சக்களத்தியர் மூச்சுப்படாத] இராமனது மார்பில் நெடுநாள் அருளப் பெற்றேன்.

**வேத:-**தோழி! புகழ்ந்துகொள்ளாதே! இராமனுக்கு யக்ஞ தீட்சை [வேள்வி] க்குரிய சமயம் வந்துவிட்டது.

**சீதை:-** அதனாலென்ன?

**வேத:-** சகதருமசாரிணி (வாழ்க்கைத்துணைவி) யைக் கைப்பிடிக்க வேண்டிய தின்றியமையாதது.

**சீதை:-**அண்ணலின் இதயத்தில்தான் என் செல்வாக்கன்றி கைகளில் அல்ல.

**வேத:-** [தனக்குள்] என்னே! இவள் உறுதியான அன்பு [வெளிப்படையாக] தோழி! குழந்தைகள் முகத்தைக் கண்டாவது உன்பிரிவுத் துயர் குறைய வில்லையா?

**சீதை:-**தோழி! துயரத்தை அது வளர்க்கின்றதே யன்றி குறையவில்லை.
**வேத:-** அதென்ன

**சீதை:-** அக்குழந்தைகள், பால்மணம்மாறாது பல்முளைத்த இன்முகத்தோடு என் முகம் நோக்கிச் சிரிக்கும் போதும், மிக இனிய மழலைச் சொற் பயிலும் போதும் அவர்களது பேதமை கண்டு நான் என்னையே மறந்து போகிறேன். அவர்கள் இப்போது வளர்ந்து பாலியம் கழிந்தது. இது என்னை மிக வும் வருத்துகிறது.

**வேத:**-என்னே! இராமனின் அருளின்மை! குழந்தைகளைப் பெற்ற சீதை இத்தகைய நிலைமையை அடைந்துள்ளாளே!

**சீதை:**-தோழி! வேதவதி ! எப்போது.....?

**வேத:**-நாணம் எதற்கு? சொல். "அண்ணலைப்பார்ப்பேன்" என்று

**சீதை:**- [தனக்குள் ] நாணம் ஏன்? இப்படிச் சொல்வேன். [வெளிப்படையாக ]குசலவர்களின் தந்தையைக் கண்டு இப்பிறவி எப்போது பாக்கியமுறுமோ?

**வேத:**- நீ விரைவிலேயே மன்னரைக் காணப் போகிறாய்!

**சீதை:**- எப்படி?

[திரையில் முனிவன்]

ஓ! ஆசிரம வாசிகளே! கேளுங்கள்! இங்கு அருகிலேயே அசுவமேத மகாயக்ஞம் நடக்கிறது. வேள்விக்குரிய பொருட்கள் சேகரிக்கப் பட்டுள்ளன, வசிஷ்ட, ஆத்ரேய முதலிய முனிவர்களும், எல்லா இடத்திலிருந்தும் ஆசிரம வாசிகளும் வந்துள்ளனர். மாமன்னர் இதுவரைக்கும் வால்மீகி முனிவனின் வருகைக்காகவே எதிர்பார்த்து யாகதீட்சை பெறாது இருக்கிறார். வால்மீகி ஆசிரமவாசிகளை அழைக்க இராமதூதன் வந்துவிட்டான். ஆகையால் தாமதம் செய்யவேண்டாம். புண்ணிய தீர்த்தவாரி, சமிதைகள், தருப்பை முதலியன நிறையக் கொணர்ந்து முனிவர்கள் முன் நடக்கட்டும் முனி கன்னியர் தவக்குடில்களில் மங்கல பலி செய்வார்களாக.

**சீதை:**-நானும் விரைகிறேன்! அவனே காசியபன்.

பயணத்தைத் தெரிவித்து இப்போதுதான் வேள்விக் கருவிகள் எடுத்துக் கொண்டு முன் செல்கின்றான்: நானும் குசலவர்களின் நற்பயணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்.

..............

## மூன்றாம் அங்கம்

[சுமை சுமந்துகொண்டு, நெடும்பயணக் களைப்பால் துவளும் முனிவன் ஒருவன் வருகிறான்]

**முனிவன்:-** [களைத்தவனாக] அப்பப்பா! சீதையின் பிரிவொத்த நீண்ட இக்கோடை வெயிலில் மிகவும் களைத்துப் போனேன். பயணக்களைப்பால் நடை தள்ளாடுகிறது. அடியெடுத்து வைக்க முடியவில்லை உள்ளங்கால் கொப்புளமாகி விட்டது. மெல்லியல் சீதையும் இனிய குசலவர்களும், முனிவர்களோடு பொழுது சாயுமுன்பே நைமிடம் சென்றுவிட்டனர், நான் இன்னும் கருங்காட்டின் எல்லையைஅடையவில்லை.[ஆலோசித்து ]நைமிசத்திற்கு வழி யார் காட்டுவார்கள். [பார்த்து ]அதோ! நிச்சயமாக ஸ்ரீராமன் லட்சுமணனோடு நையிசம் செல்கின்றான். நானும் அவர்களைப் பின்பற்றிச் செல்கிறேன்.

## பிரவேசகம்

[முன்னர் லட்சுமணனும் பின்பற்றி வருத்தமுடன் இராமனும் வருகின்றனர்]

**இலட்சுமணன்:-** அண்ணலே! இவ்வழி! இவ்வழி.[நடந்து தனக்குள்] நிரபராதியான தேவியை இக்கொடிய காட்டில் தன்னந்தனியாக விடுவதற்காக முன்பு வந்தேன். மீண்டும் குலத்தில் எஞ்சிய இராமனை அழைத்துக் கொண்டு, பிரிவில் மெலிந்த மன்னனுடன் இங்கு வந்துள்ளேன். ஆ! சான்றோர்பொன் மொழிகள் எவ்வளவுமாகாயுள்ளது. விழிப்புடன் இல்லாவிட்டால் செல்வம், அழிகின்றது. அடக்கம் பெருமிதத்தைக் அழிக்கின்றது. புலன் வேட்கைகள் ஒழுக்கத்தை கெடுக்கின்றது. கவலை மன உறுதியை

அழிக்கின்றது. இந்த மந்தரமலையொத்த உறுதி படைத்த அண்ணல், வால்மீகி மாமுனிவரின் வருகையைக் கேட்டு, அவரைக் காண்பதற்காக கோமதி நதிக்கரை ஆசிரமத்திற்கு விஜயம் செய்யும் நோக்கில், கவலையில் வழிதவறிக் காட்டின் பக்கம் போகிறான் ஆதலின் வழி சொல்லட்டுமா? அதனால் பயன் என்ன? நான் முன்நடந்து போகிறேன். அண்ணல் உணர்வின்றியும் வால்மீகி ஆசிரமத்தை அடைவான். [வெளிப்படையாக]
அண்ணா! இவ்வழி.

**இராமன்:-** [நெட்டுயிர்த்து] கடலை சேதுபந்தனத்தால் தாண்டியும் வீணாக அக்னிதேவனின் பரிசுத்த சாட்சியத்தையும் மதியாமல் இக்ஷ்வாகு குல சந்ததியையும் பொருட்படுத்தாமல், மைதிலியை மோக விதியால் கைவிட்ட நான் என் செய்வேன்? [நடந்து]

திக்கற்ற அத் தவமகளின் பிரிவு எத்துணை இரங்கத் தக்கது? எந்தக் காட்சிகளைக் கண்டு, எதில் மனம் செலுத்தித் தன்னை ஆற்றுவித்துக் கொள்கிறாளோ, நிராசையுடன், கொடும் விலங்குகளுடைய காட்டில் சீதை எப்படி வாழ்கிறாளோ?

**இலக்:-**[தனக்குள் ]அம்மையின் பிரிவு, சந்ததி இன்மையை நினைந்து அண்ணல் உள்ளூரக் கவலையில் மறுகிறான்: வேறு பேச்செடுத்து அவள் நினைவினை மாற்றுகிறேன் [வெளிப்படையாக] அண்ணா! கொஞ்சம் இங்கு கவனியுங்கள், மரகதப்பச்சைப் புல்கரைகளில் தெளி நீரோடும், மென்னடை அன்னங்களில் மெல்லிசையும், தாமரைக் காட்டினை அளைந்து திசை பரந்த தென்றலும் கூடிய கோமதி நதி நம்முன்னே எழிலோடு இருப்பதைப் பார்!

**இராமன்:-**[தொடுகையுணர்ந்து] முத்துமாலை, இளந்தென்றல், சந்தனம், நிலவு எல்லாம் சீதையைப் பிரிந்த பின்னர் துயர்மிகவே செய்தன. ஆனால் இன்று கோமதி நதிக்கரைத்தென்றல் இன்புறுத்துகின்றது. நிச்சயமாக, அந்த பிரிவிடைமெலிந்த நங்கை இத்திசையில்தான் இருக்கிறாள்.

**இலக்:-** இந்த நதித்துறை மிகுந்த மேடுபள்ளங்களாயுள்ளன.

ஆதலின் விழிப்போடிறங்க வேண்டும் [இருவரும் இறங்குகின்றனர்] [ஆய்ந்து] மணல் தரைகளில் நெருக்கமாக காலடிச் சுவடுகள் பதிந்துள்ளன, காம்புகள் மீந்த கொடிகளில் பூக்கள் கொய்த அடையாளம் புலப்படுகின்றது. தினமும் தளிர்களைக் கொய்தமையால் மரங்களின் நிழல் நெகிழ்ந்துள்ளன. ஆதலின் அருகில் சிற்றூர் உள்ளதெனக் கருதுகிறேன். இது நிச்சயம். தெய்வங்கட்குப் புதிதாக இடப்பட்ட நீர்ப்பூக்களால் சிதறிய மணல் தரையும், நீரலைகளின் நடுவே பெண்பாம்பு போல எழில் பெரும் முல்லைப் பூமாலை யும் இங்குக் காணப்படுகிறது.

*இராமன்:-* ஊர் அருகில்தான். ஆனால் ஆற்றுக்கு அப்பக்கம் உள்ளது.

*இல:-* ஆச்சரியம்! ஆச்சரியம்! கடல் நோக்கிச் செல்லும் அலைகளால் இந்த நதி தேவதை தங்கள் பாதசேவை செய் யும் பொருட்டு, இந்த முல்லைப் பூமாலையை தங்கள் பாதகமலங்களில் சேர்த்துள்ளது. அற்புதம்! செய் நேர்த்தி காணத் தகுந்தது. அண்ணல் காண்பீர்களாக.

[எடுத்துத்தருகிறான்]

*இராமன்:-* [புளகமுற்று] குழந்தாய்! இப்பூமாலையின் செய்நேர்த்தி முன்பே கண்டதுதான்.

*இல:-* எங்குக் கண்டீர்கள்.

*இரா:-* இது வேறெங்குக் காணமுடியும்!

*இல:-* என்ன? தேவியினுடையதா?

*இரா:-* ஆம்.

*இல:-* எல்லாம் வல்ல விதி எப்படி எப்படி விளையாடுமோ

யாரறிவார்! அண்ணலே! செல்க! இந்த கோமதிநதி எதிர்க்கரையை யடைந்து இந்த குந்தமாலை (முல்லைப் பூமாலை) பிறந்த இடத்தைக் காண்போம்!

**இராம:**- உலக நடவடிக்கைகள் ஒன்று போலொன்று அமைவதுண்டு. இது நமது பாக்கிய வசத்தால் ஆனதன்று. கைவிடப்பட்ட சீதை இவ்வளவு தொலை தூரத்திற்கு வருவாள் என்று நினைக்க முடியாது. எனினும், நீ சொன்னபடி இவ்வாற்றின் வழியே சென்று அச் சிற்றூரையடைவோம்.

**இலக்:**- இவ்விடம் முள்போலக் குத்தும் பரற்கற்கள் நிறைந்து நடந்தற்கரிதாயுள்ளது. எப்படி எப்படிச் செல்கின்றேனோ. அந்த வழியே அண்ணல். மெல்ல வருக!

**இலக்:**- இந்த முல்லைப்பூமாலை விரும்பத்தக்கதாயினும் தெய்வத்துக்குச் சூட்டியதாக இருக்கலாம். ஆதலின் கைக்கொள்ளத் தகுந்த தன்று. [விடுகிறான்]

**இலக்:**-இந்த பிரப்பங்கொடியைத் தாண்டுக. சிப்பிகளில் கால வைக்காதீர்கள். இந்த மரக்கிளை வளைந்துள்ளது. தலை குனிந்து வருக. வில் நுனியால் குறுக்கே கிடக்கும் கிளையை விலக்குக. நீர்ப்பறவைகள் பயந்து ஓடுகின்றன. தைரியமாக வருக.

**இராம:**- [அப்படியே நடந்து] குழந்தாய்! இந்தப் பக்கம்தான்

வால்மீகி ஆசிரமம் உள்ளதா?

**இலக்:**- அண்ணல் எப்படிக் கண்டீர்கள்?

**இராம:**- மெல்லிய புகை வரைகள் பரவுதல் காணப்படுகிறது.

மென் காற்றில் தவழும் சாமகானம் செவியிற் படுகிறது.

**இலக்:-** அண்ணல் சரியாகச் சொன்னீர்கள். நான் முன்னடந்துபோய்க் காண்பேன். [நடந்து தொடை நடுங்கவே] காலடி எடுத்துவைக்கு முன்பே இதயம் நடுங்குகிறது ஏன்? தொடைகள் மரத்துப் போய்விட்டன. எடுத்த அடி முன்வைக்கும் ஆர்வம் இல்லை. என்ன இது [ சிந்தித்து] தெரிந்தது. யாரோ ஒருவருடைய புனிதபாதங்கள் இங்கே இவ்விடத்தை பவித்திரமாக்கியுள்ளது. பாதமுத்திரைகள் (அடிச்சுவடுகள்) தென்படுகின்றன [குனிந்துபார்க்கிறான் ]

**இராம:-** குழந்தாய்! இந்த நிலத்தை ஆராய்ந்து என்ன செய்கிறாய்?

**இலக்:-** இந்த மணல்தரையில் மனங்கவரும் மென்மையான நங்கையின் அடிச் சுவடுகள் தென்படுகின்றன. அண்ணலே! காண்க! ஓயிலாக நடந்தோ, களைப்புற்று நடந்தோ, இயல்பாக நடந்தோ, யாருடைய அடிச் சுவடுகளோ மென்னடை யன்னத்தின் பொலிவினை ஒத்துள்ளது.

**இராம:-** [பார்த்து மகிழ்ச்சியுடன்]குழந்தாய்! யாருடையதோ என்றா சொல்கிறாய்? சீதையின் பாதங்கள் என்று சொல்! பார்! இந்த சீரான நடை, மென்மையான இயல்பு, மணற் சுவட்டில் பதிந்துள்ள கமல ரேகை அழகிய பொட்டு, இவை கண்டதும் என் வருத்தம் அழிந்தது. என் தேவியின் பாதங்கள் தான் பதிந்துள்ளன.

**இலக்:-** [மகிழ்ச்சியுடன்]இவ் வடிச்சுவடுகளைப் பின்பற்றி வான்மீகி முனிவர் ஆசிரமத்திற்குச் செல்வோம். இப்போதே நடந்து சென்ற அடையாளங்களால் தேவி அருகிலேயே இருக்கலாம் என்று தோன்றுகிறது.

[சீதை வருகின்றாள்]

வேள்வி (குளியல்) முடிந்தது: அந்தி வணக்கம் ஆயிற்று. தீயை வணங்கினேன். பகவதி பாகீரதியை அஞ்சலித்து நேர்ந்து கொண்டபடி கங்கையில் என்கையால் தொடுத்த முல்லைப்பூமாலையை சமர்ப்பித்தேன்: இனி நான் விருந்தோம்பலுக்காக உயர்குளிர்க் கொடிகள் மிடைந்த பூம்புதரில் புக்கு பூக்கொய்து வருகிறேன்.

[மலர் கொய்கிறாள் ]

**இலக்**:-இவ் வடிச்சுவடுகள் நிரல்பட வழிநடந்து மணல் தரையை விட்டு நிலத்தில் ஏறி மறைந்து போயிற்று. ஆகையால், இதோ எதிரில் தென்படும் குளிர்ந்த அழகிய பூம் புதரில் சிறிது நேரம் இளைப்பாறிப் பின் வால்மீகி முனி வரைத் தரிசிப்போம்.

**இராம**:- அப்படியே ஆகட்டும்

[நடந்து அமர்கின்றான் ]

**இராமன்**: - [நெட்டுயிர்த்து கண்ணீருடன்] குழந்தாய்! குழந்தாய்!

**சீதை**:- [காதுகொடுத்துக் கேட்டு ] கார்முகில் முழக்கம் என கம்பீரமான இக் குரல் யாருடையது? மிக்க துன்ப முடையதேனும் என்னுடல் புளகாங்கித மடைவதேன்? யார் என்று பார்க்கிறேன். எனினும் தகாது. புது இடத்தில், நிலைமை புரியாமல் பார்ப்பது அழகன்று. தெரிவதற்கு என்ன இருக்கிறது? பிற ஆடவர் குரலுக்கு என்னுடல் புளக முறுமா? அவ் அருளிலாதவன் தான் என்பதில் ஐயமில்லை. ஆதலின் பார்க்கிறேன். எனினும் என்பால் பராமுகனாகிய அவ்னிடம் முகம் காட்டுவதெப்படி என்று எனக்கு நானே நாணமுறுகிறேன். ஆதலின்பார்க்கமாட்டேன்[ பராமுகமாக] என்னை நான் சமாளித்துக்கொள்ள முடியவில்லையே!

என்பார்வை பலாத்கார (வற்புறுத்தி) மாக அங்கேயே செல்கிறது. என் செய்வது? மன்னன்பால் பராதீனமான என் இதயம் தூண்டுகிறது.[பார்க்கிறாள் ]. நிரபராதியான நான் கண்டேன் என்று மகிழ்ச்சி, நெடும் பிரிவு என்ற வருத்தம், மெலிந்தேன் என்று உணர்ச்சிவேகம், அருளிலான் என்று செருக்கு, நெடுநாட்பழக்கத்தால் ஏற்பட்ட அன்பு, காண வேண்டுமென்ற ஆவல், உடையவன் என்ற உரிமை. குசலவர்களின் தந்தை என்ற குடும்ப உறவின் நல்லெண்ணம், குற்றம் சாட்டப் பட்டதால் நாணம், - அண்ணலைக் கண்டதும் நான் எந்த உணர்ச்சிப் பிரவாகத்தில் சிக்குண்டுள்ளேனோ எனக்கே தெரியவில்லை.

**இல :-** அண்ணல் ஏன் என்னை அழைத்து விட்டு, கண்ணீர் நிறைந்த கண்களுடன் தலைகவிழ்ந்து சும்மா இருக்கின்றீர்கள்?

**இராம:-** ஆளற்ற இக்காட்டில் நதிக்கரை மரநிழல் எழில் கண்டு கடல் நோக்கிச் செல்லும் தெளிந்த இனிய நீர் ஒழுக்கினைக் கண்டதும் தண்டகாரண்ய வன வாசம் நினைவிற்கு வந்து மனக் கலக்க முறச் செய்தது.

**சீதை:-** அண்ணல்! வனவாசமே யன்றி வனவாசினியைப் பற்றி எண்ணவில்லையா?

**இலக்:-** துயர்மிக்க வனவாசத்தில் நினைப்பதற்கென்ன இருக்கிறது?

**இராம:-**குழந்தாய் லட்சுமணா! வனவாசத்தில் நினைப்பதற் கென்ன உள்ளதென்றா சொல்கிறாய்! பார்! பார்! தேவியின் தளிர்மென் கரங்களைப் பற்றியவாறு மாலை நேரங்களில் காதலுரைகளில் களித்தவாறு நடந்தபோது அடிபதித்ததும் கொப்புளிக்கும் ஊற்றுநீர் சிந்தும் மணல் தரையில் திரிந்ததை நினைத்துப் பார்க்கின்றேன்.

***சீதை:***-ஓ! அருளிலாதவனே! இப்பேச்சுகளால் துயர்மிகுந்த என்னை மீண்டும் வருத்துகிறாயே?

***இலக்:***- அண்ணல்! வருந்தற்க!

***இராம:***- நற்பேறிலாத நான் வருந்தாதெப்படி இருக்கமுடியும்? முன்பு வனவாசம். பின் இலங்கையில் பிரிவு.இப்போதும் பிரிவு. துரதிர்ஷ்டசாலியாகிய என்னை அடைந்து துன்பத்தைத் தவிர சீதை வேறு என்ன பெற்றாள்? ஆ! காதலீ!

***சீதை:***-அண்ணலே! வெளியேற்றியவளுக்காக ஏன் இந்தத் துயர்?

***இராம:***-ஆ! ஜனகராஜபுத்திரி!

***சீதை:***- சிறிது புண்ணியம் உடைய நான் விடத்தகுந்தவள்தான்!

***இராம:***-ஆ! வனவாசத்துணைவியே!

***சீதை:***- இப்போது அதுகூட இல்லை.

***இராம:***-அந்தோ! எங்குசென்றாய்?

***சீதை:***- குறைநோன்பினன் எங்கு செல்வேன்?

***இராம:***-எனக்கு பதில் கூறு!

***சீதை:*** - அருகடைதற்கியலாதவளுக்கு பதில் கூறுவதெப்படி?

***இராம:***- [வருந்துகிறான்]

**இல:**- அண்ணல்! வருந்தத்தக்க சீதை என்று கூற வேண்டாம்! எந்தப் பெண்ணுக்காக கணவன் இவ்விதம் துக்கம் அடைவானோ அவள் நிச்சயம் வருந்தத்தக்கவள் அன்று.

**இராம:**-குழந்தாய்! இலட்சுமணா! அவள் எங்கிருக்கிறாள் என்று தெரிந்து கொள்ள முடியுமா?

**சீதை:**- பொழுது சாய்ந்ததும் தன் இணைபிரிந்த அன்றில் (சக்கர்வாகம்) போலப் பிரிந்து இங்கேயே இருக்கிறாள் என்று.

**இல:**-எங்கிருக்கிறாள் என்று தெரிந்து கொள்ள இயலாது.

**இராம:**-நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த ரகு குலத்தை நான் கள்ளியெறிந்தேன் (நாசமாக்கினேன்) (வருந்துகிறான்).
**சீதை:**- [வருத்தமுடன்] அண்ணல் மிகவும் வருந்துகிறான். என் செய்வேன்? துணிந்து காட்சி தரட்டுமா? கண்ணீரைத் துடைக்கட்டுமா? [எட்டு வைத்து] எனினும் மக்கள் பழிச் சொல்லைக் காத்தல் வேண்டு மல்லவா? அண்ணால் காணாதவாறு மறைந்து கொள்கிறேன். அந்தோ! வருத்தத்தால் துவளும் நான் என்னை நானே அடக்கியாள முடியாதுள்ளேன். முனிவர்கள் வரும் இடம் ஆகையால் யாராவதொரு முனிவன் என்னைக் காணக் கூடும். ஆதலின் பூம்புதர் செறிந்த மறைவான சந்து வழியாக ஆசிரமத்துக்குச் சென்று குசலவர்களைக் கண்டு கொள்கிறேன்.

[பார்த்துக் கொண்டே செல்கிறாள்]

[அப்போது ஒரு முனிவன் வருகிறான்]

**முனிவன்:**-வால்மீகி மாமுனிவனால் பணிக்கப் பட்டுள்ளேன். "குழந்தாய்! பாதராயணா! இலட்சுமணனொடு கூட இராமபத்திரன் இத் தபோவனத்திற்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். நண்

பகல் கடன் முடிப்பதில் ஈடுபட்ட எனக்காக அவன் வெளியில் காத்திருக்கலாம். ஆதலின் நீ போய் நான் நண்பகற் கடன் முடித்து உன் வருகைக்காக எதிர்பார்க்கிறேன் என்று கூறுக" என்று வால்மீகி மகரிஷியின் ஆணைப்படி இராமனைத் தேடுகிறேன். [நடக்கிறான்]

**இலக்:** - [பார்த்து பரபரப்புற்று]அண்ணல்! யாரோ ஒரு முனிவன் இங்கு வருகிறான்.

[இராமன் கண்களைத் துடைத்துக் கொண்டு தைரியமுடன் இருக்கிறான்]

முனி:- அடே! இப்பூம்புதர் நிழலில் யாரோ இரு மானுடர் இருப்பது போல் தோன்றுகிறது. இலட்சுமணனுடன் கூடிய இராமன் தானோ? [பார்த்து] ஆம்! ஐயமில்லை காற்று மெதுவாக வீசுகிறது. வெயில் கடுமையாக இன்றி மெல்லக் காய்கிறது. மான்கள் அச்சமின்றி சிங்கங்களுடன் திரிகின்றன. நண்பகலாகியும் நிழல் குறையாமல், உள்ளது. இக் காட்டிற்கு இராமன் எனும் பெயருடைய திருமால் வந்திருக்கிறான் என்று தெரிகிறது. தெய்வீக சக்தியால் மட்டுமின்றி உருவத்தாலும் இதுவே உறுதியாகிறது. இவனிடம் சென்று செய்தி கூறுகிறேன்: [அருகடைந்து] மன்ன! ஸ்வஸ்தி!

**இராம:**- வணக்கம் ! (அபி வாதம்)

**முனி:**- வெல்க ! ( விஜயீபவ)

**இராம:**-ஐயன் வந்த தென்னவோ?

**முனி:**-நண்பகற் கடன் முடித்துவிட்டு, வால்மீகி முனிவர் மாமன்னரின் வருகையை எதிர் நோக்குகிறார் .

**இராமன்:**- [பார்த்து] அடே! இப்போதே நண்பகல் கடந்து

விட்டதே! நண்பகல் வெயிலின் மரத்தடியில் புக்கிருந்த நிழல் *வழிப்போக்கனைப் போல, மெல்ல மெல்லச் செல்லுகின்றது,

நண்பகல் கதிர்க்கற்றைகளின் சூடு மிகாமல், நீரில் அளைந்த, நீர்த்துளிகள் செவிவிசிறும் காற்றினால் முகத்தில் சிதற மகிழ்ந்து, மார்பில் நீரைப் பொழிந்தபடி மெல்ல மெல்லக் கரையில் வந்து, தும்பிக்கையால் பிளிறியபடி ஆற்றில் அலை வட்டங்களை உருவாக்கியபடி களிறு செல்கிறது.

[எல்லோரும் செல்கின்றனர்]

---

*வழிப் போக்கன் மரத்தடியில் வெயிலுக்கஞ்சி இளைப்பாறிச் செல்வது போல நிழலும் மரத்தடியில் இருந்து மெல்ல வெளியேறிச் செல்கிறது என்ற கருத்து,

## குந்த மாலா

### நான்காம் அங்கம்

[இரு பெண் துறவிகள் வருகின்றனர்]

**முதலவள்:-** யக்ஞவதி! இராமாயண இசையின் பொருட்டு வால்மீகி தபோவனம் வந்துள்ள திலோத்தமை என்னிடம் இவ்விதம் கூறினாள். " நான் தெய்வீக சக்தியால், சீதையின் உருவம் எடுத்து, இராமனிடம் சென்று அவனுக்கு சீதையிடம் உண்மையான அன்பிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஆகையால் நீ இராமன் இருக்குமிடம் ஆராய்ந்து சொல்க" என்றாள். ஆதலின் தோழி! இராமன் தங்குமிடம் காட்டுக.

**யக்ஞவதி:-** வேதவதி! இராமனின் இனிய தோழன் கௌசிகனால் புதர் மறைவிலிருந்து திலோத்தமையால் சொல்லப் பட்டதெல்லாமே கேட்டுவிட்டான்.

**வேதவதி:-** தவறல்லவா நடந்துவிட்டது. செய்தியறிந்துவிட்ட இராமன் முன் சீதை வேடத்தில் திலோத்தமை போனால் விபரீதமாகி நகைப்பிற்கிடமாகி விடும். ஆதலின் இனிய தோழி திலோத்தமையைத் தடுக்கிறேன்.

**யக்ஞ:-** வேதவதி! சீதை இப்போதெங்கிருக்கிறாள்.

**வேத:-** சீதையா! கேள்! இற்றைக்கு ஏழுநாட்களுக்கு முன்பு தபோவன வாசிகள், எல்லோரும் பகவான் வால்மீகியிடம் "சுவாமி ! மன்னன் இராமன் நம் செய்குளத் தருகே

இருப்பதால் பிற ஆடவர்கள் காணாதவாறு நாங்கள் தாமரை மலர் கொய்வதோ, குளிப்பதோ இயலாதவாறுள்ளது". என்று முறையிட்டார்கள் . வால்மீகி முனிவர் சிறிது நேரம் கண்கள் அசையாமல் தியானித்திலிருந்து பின் இவ்விதம் கூறினார். "இச் செய்குளம் (நடைகிணறு) மருங்கில் இயலும் பெண்டிர் ஆடவர் கண்களுக்குத் தென்படாராகுக" என்று அருளினார். அன்று முதல் சீதை இராமன் கண்களில் படாதவாறு செய்குளத் தருகே பகல் முழுவதும் கழிக்கிறாள்.

**யக்ஞ:**- *இராமனுடன் தமக்குள்ள உறவு குசலவர்களுக்குத் தெரியுமா?*

**வேத:**- சிறு குழந்தைகள் தானே! முனிவர்களுடன் கூடியிருக்கும் அவர்கள், தாயின் பெயர் கூடத் தெரியாமல் வளர்ந்து வருகிறார்கள். நெடுங்காலமாகப் பிரிந்த தந்தையைப் பற்றி என்ன தெரியப் போகிறது?

**யக்ஞ:**-*இராமன் தபோவனம் வந்துவிட்டானா? இல்லையா என்று தெரியுமா?*

**வேத:**-அவன் எங்கு வந்தான்?

**யக்ஞ:**- நீ திலோத்தமையிடத்திற்குச் செல்! நான் சீதையின் பக்கம் துணையாக இருக்கிறேன்.

[செல்கின்றனர்]

### பிரவேசகம்

[(உத்தரீயம்) மேலாடை போர்த்திக்கொண்டு சீதையும் யக்ஞவதியும் வருகின்றனர்]

**யக்ஞ:-** தோழி வைதேகி! இந்த உத்தரீயம் இணை அணிந்திருப்பது மிகவும் சிறப்பாக இருக்கிறது? எங்கு கற்றாய்?

**சீதை:-** மிகக் குளிர்ந்துள்ள அலைதவழ்ந்து வரும் இச்பொய்குளக் காற்றிடமிருந்து.

**யக்ஞ:-** முழுமதி போன்ற தூயவெண்மை யும், மணமார்ந்த மனங்கவரும் வண்டுகளின் மெல்லிசை போன்றதுமான இந்த பிராவரணம் (உத்தரீயம்) அணிவது பிரிவுக்கு முரண் உடையதல்லவா?

**சீதை:-** தோழி! முன்பு யாம் மன்னரின் ஆணையால் வனவாசம் சென்று சிலநாள் சித்திர கூடத்தில் இருந்து விட்டுப்பின் தென்திசை ஏகும் போது, நெடுநாள் பழகிய நட்பின் சின்னமாக சித்திர கூட வனதேவதை மாயாவதி தன் நினைவிருக்கும் பொருட்டு நிலவொத்த தூய்மை யும் மணம் பொருந்ததுமான இந்த திவ்விய உத்தரீயம் தந்தனள். அண்ணலால் கைவிடப்பட்ட எனக்கு இத்தகு துயர்க் காலங்களில் நெருங்கிய பற்றும், இன்ப துன்பங்களில் நற்றுணையுமாகிய இதனை விருப்புடன் அணிந்துள்ளேன். [அழுகிறாள்]

**யக்ஞ:-** தோழி! வருந்தாதே! இந்த தபோவன வாசம் வனவாசம் என்று எப்படிச் சொல்வது?

**சீதை :-** எப்படி வருந்தாமலிருக்க முடியும்? அண்ணல் இந்த தபோவனத்திற்கு வந்துள்ளார் என்றதுமே நம்பிக்கையும் துயரமும் இருமடங்கானது: தனியாக இரவுபகலெந்நேரமும் நெடுமூச் செறிந்து பொழுதைக் கழிக்கின்றேன். இது எவ்வளவு வலிய துன்பம் தெரியுமா?

**யக்ஞ:-** அதையெல்லாம் பொருட்படுத்தக்கூடாது. நீ இந்தப் பொய்கைக் கரையில் இருந்துகொண்டு பறவைகள்

இணைகூடிச் செல்வதைக் கண்டவாறு வருத்தத்தை மறப்பாயாக! நானும் என் பணிமேற்கொண்டு செல்கிறேன்.

சீதை :- [பொய்கையைப் பார்த்து] இந்த அரசன்ன இணைகள் எவ்வளவு பாக்கிய முடையவை. பிரிவுத் துயர் இன்றி என்றும் இணைகூடி மகிழ்ந்தவாறுள்ளன. பிரிவுத்துயருக்கு எடுத்துக் காட்டாக, என்னைவிடச் சிறந்த போதனைக்குரிய ஆசிரியை எவளும் இல்லை. விலங்குகள், பறவைகள்கூட ஒன்றொடொன்று மனங்கலந்தின்புற்று மெல்லினிய மொழி பயின்று களிப்புடன் திகழ்கின்றன.

**யக்ஞ:**[பார்த்து] என்ன இந்தப் பரபரப்பு? இருக்கைவிட்டு விரைந்தெழுந்து, உடைகளை (மரவுரி, உத்தரீயங்களை) சரிப்படுத்தியவாறு, வியப்பால் அகன்ற கண்களுடன் எல்லோரும் ஒரே திசையில் செல்வதைப் பார்த்தால் மாமன்னர் வந்திருப்பதாகத் தெரிகிறது.

[செல்கிறாள்]

[வருத்தத்துடன் கண்ணுவனோடு இராமன் வருகிறான்]

**கண்:**- "கண்வ! கண்வ! நைமிசாரணிய எழில் மிகும் காட்சிகளைக் காட்டி இராமனை மகிழ்விப்பாயாக" என்று வால்மீகி பகவான் ஆணையிட்டுள்ளார். இந்த இராமனோ கவலையோடு முன்னால் நடக்கும் என்னைக் கூடக் கவனிப்பதாகத் தெரியவில்லை.

சமதள வழியில் கூட நடை தள்ளாட, தாமதித்தவாறு மெல்ல நடந்து, தலைகுனிந்து எழில் மிகுந்த இக் காட்டினைக் காணாதிருக்கிறான் [அருகணைந்து] ஓ! மாமன்ன!

**இராம:**- ஓ! நண்ப! உன் அழைப்பு முனிவர்க்குரித்தன்று. எனினும் உன் குற்றம் வயதால் ஏற்பட்டதன்றி உன்னால் ஏற்பட்டதன்று.

நான் இராமனாகவும் நீ கண்வனாகவும் சிறுவயதில் இருந்தோம். கால வேறுபாட்டால் (வயதால்) நீ அண்ணலாகவும் நான் மன்னனாகவும் ஆகிவிட்டோம்.

**கண்:-** இந்தப் புனைந்துரை (குத்திக்காட்டிப் பேசுதல்) பெருந்தகைமையுடையதே.

**இராம:-** சொல்லவேண்டியதெதுவே சொல்!

**கண்:-** மணமலர்கள் திக்கெல்லாம் மணம் பரப்ப, ஆயிரக் கணக்கான மரங்கள் பழுத்துக் குலுங்கி கிளை வளைந்திருக்க, பசுமை சூழ்ந்திலும் இக்காடு எத்துணை அழகாக மனங் கவர்கின்றது.

**இராம:-** மரியாதைக்குரிய இத் தபோவனக் காடுகள் என்றும் என் மனதிற்கினியவையே என்பதில் தடையுண்டோ? பார்!

காட்டுத் தீயை வேள்வித்தீ எனவும், மரங்களை யூபஸ்தம்பம் (வேள்வித்தூண்) போலவும், புள்ளினங்களின் மெல்லிசை சாமகீதமாகவும், மான்களை முனிவர்களாகவும் பாவித்து பேறுற்றவனாக நான் இந்நிலத்தில் தயங்கித் தயங்கி அடியிடுவேன்.

**கண்:-** உலக நன்மையின் பொருட்டு முன்னேற்றத்தின் படிகளான தவ ஒழுக்கம் மேற்கொண்ட முன்னைய ராஜரிஷிகள் (மன் முனிகள்) மரபுரிமையான இந்த நைமிடம்,குறித்து அறநெறி வழாத மாமன்னர் இவ்விதம் கூறுவது தகுதியுடையதே. மூவுலகையும் ஒரே வில்லால் வென்று, புனிதவேள்விகள் நெறியே இயற்றி, தம் மக்களிடம் அரச பாரத்தை ஈந்து இக்ஷ்வாகு குல மன்னர்கள் இத் தபோவனத்தில் தான் ஓய்வுகொண்டின்புறுவர்.

**இராமன்:-** [வணங்குகிறான்]

கண்:- வேறெங்கும் காணரிய சிறப்புமிக்க இந்த நைமிசத்தின் பெருமையைக் காண்க!

சிவன் தலை முடியிலமர்ந்த நிலவும், இளஞ் சூடான கோடை வெயிலும் கலந்து, இயங்க, இங்குள்ள மரந் தளிர்கள் வாடுவதில்லை. நீர் என்றும் வற்றுவதில்லை. மக்களை (வெயில்) வருத்துவதில்லை. மக்கள், கண் பார்வைக்குப் போதுமான அளவே ஒளி பரவும். மேலும், இங்கு இடையறாத வேள்வி தினந்தோறும் இயற்றப் படுதலால் இங்கேயே தங்கிய இந்திரனுடைய மதமிக்க * ஐராவதம் (வெள்ளானை), சுவர்க்க நந்தன சந்தன மரத்தைத் தவிர்த்து, இந்த மரத்தில் கட்டப்பட்டதால் கழுத்துக்கயிறுராய்ந்த வடுவார்ந்த மரத்தினைக் காண்பாயாக.

**இராமன்:**- [பார்த்து] இடையறாத வேள்வி களியற்றும் இந்த அறக்காட்டினை (தரும வனத்தினை) க்கண்டு தேவர்கோன் இந்திரன் தனது நந்தன வனத்தை யறந்துவிட்டான்.

இந்திரனையழைக்கும் (ஈர்க்கும்) மந்திரங்கள் செவியிற்பட்டதும், அஞ்சிய சசிதேவி(இந்திராணி) எப்போதும் *பூமாலையைக் கழற்றி பிரிவுக்கேற்பக் கூந்தலை முடித்துக் கட்டுவாள்!

**கண்:**- இதோ! இதைக் காணவில்லையா?

சாமகீதத்தைக் கேட்டுலயித்த மதயானை, மதத்திற் படிந்த வண்டுகளை ஒட்டாமல் காதுகள் அசைக்காமல் இருக்கும்.

**இராமன்:**- [நகைத்து] இதில் வியப்பென்ன இருக்கிறது? முனிவர்களின் புனிதமான இனிய சாமகீதம் பிரிவாற்றாதவரையும் மனங்கவருமானால், மதயானையைக் கவருவதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

---

* இராவணன் பெயர் நினைவூட்டல் உத்தி.

*பிரிந்த மனைவி பூ அணியாள் ஆதலின் இந்திராணி பூச்சூடல் தவிர்ந்தாள் என்று கருத்து.

**கண்:-** அந்தோ! புகையால் கண்கள் துன்புற்றனவோ!

**இராம:-** சீதையின் விரகதாபத்தால் கண்ணீர் பொழிந்து இடையறாத துக்கத்தால் அழிந்து என் கண்கள் மீண்டும் புகையால் துன்புற்று வருந்துகின்றன.

**கண்:-** அப்படியாயின் எதிரேயுள்ள ஆசிரமக் கேணியில் குளிர்ந்த சீரால் கண்களைக் கழுவிக் கொண்டு சிறிது நேரம் இளைப்பாறுக! நானும் குலபதி (வான்மீகி) வேள்வி நேரம் ஆயிற்றதலின் அவருடன் செல்கிறேன்.[செல்கின்றான்]

**இராம:-**[நடந்து] இந்தக் கேணியில் இறங்குகிறேன். [இறங்கி] ஆஹா! பொய்கை நீர் எவ்வளவு தெளிவாக இருக்கிறது. [நீரிடையே நிழல் கண்டு பரபரப்புற்று] இங்கெப்படி சீதையும் தோன்றுகிறாள்?

[மகிழ்ச்சியும் வியப்பும் அடைகிறான்]

**சீதை:-** [பார்த்து]அய்யய்யோ! அன்னப் பேடுகளைக் கண்டவாறு மெய்மறந்து, அண்ணல் வருவதைக் காணவில்லையே! விலகிச் செல்கிறேன்.

[விலகிச்செல்கிறாள் ]

**இராமன்:-** என்னைப் பொருட்படுத்தாமலே சீதை போய்விட்டாளா? என் நெடும் பிரிவாற்றாமையால் வெளுத்த கன்னங்களில் நீண்ட கருங்கூந்தல் படியும் முகத்தினைச் சிறிது காட்டி ஆயிரம் ஆசையோடு தெளிவாகக் கண்ட சீதை மீண்டும் மறைந்துவிட்டாளா? அவளைப் பிடித்துக் கொள்வேன். [கைகளை நீட்டி] இவள் சீதையன்று. பொய்கைக் கரை வழியே எங்கோ செல்லும் சீதையின் நீரிற் படிந்த நிழலே நான் கண்டது, ஆதலின் நிழற் காரணமான மூலத்தை ஆராய்கிறேன்.[ஆராய்கின்றான் ] இதென்ன?

கரையில் யாரும் இல்லையே! பிம்பம் (உருவம்)இல்லாமல் பிரதி பிம்பம் எப்படி உருவாகும்? இதென்ன மாயம்?

**சீதை:-** அண்ணல் என் நிழலைக் கண்டு என்னைக் காண இயலாதிருக்கிறான்! [சிந்தித்து] ஆம்! புரிந்தது! முனிவர் அருளால் தபோவனவாசிப் பெண்டிர்கள் பொண்ணைக் கரையில் ஆடவர் கண்களுக்குத் தெரியாமலிருக்கும் படி முனிவர் அருள் கூர்ந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? நானும் நிழல் தோன்றாதவாறு விலகிச் செல்கிறேன். [மறைகிறாள்]

**இராம:-** தெளிந்த நீரில் படிந்த சீதையின் நிழலுருவேனும் காண்கின்றேன்! [பார்த்து] அந்தோ! அதுவும் மறைந்து விட்டதே! [மயங்குகிறான்]

**சீதை:-** அய்யோ! அய்யோ! அண்ணல் மயங்கிவிட்டான். அருகே செல்கிறேன்! [நடந்து] சுவாமி மீண்டும் கோப முறலாம்! முனிவர்கள் ஒழுக்கமற்றவள் எனக் கருத நேரிடலாம். ஆதலின் திரும்பி விடுகிறேன் [நின்று] இப்போது நீதி அநீதிகளைப் பற்றி ஆராய்வதற்குரிய நேரமில்லை! அண்ணல் என்னைக் கோபிக்கட்டும்! முனிவர்கள் பழிதூற்றட்டும், இந்த நிலைமையிலுள்ள அண்ணலை விட்டுச் செல்ல என்னால் இயலாது. [மீண்டும் நடந்து] திக்பாலகர்களே! கேளுங்கள்! அண்ணலால் கைவிடப்பட்ட நான், இப்போது அண்ணலின் கட்டளையை மீறுபவளாக இல்லை. எனினும் துயர் மிகுதியால் இந்தத் துணிகரச் செயலாற்ற முனைந்துள்ளேன். [அருகிற் சென்று பார்த்து]அய்யோ! அய்யோ! உணர்விழந்து அண்ணல் இருக்கிறான். [தொடுகிறாள் ]

[இராமன் உணர்வு பெற்று எழவும் சீதை மறைகிறாள்]

**இராமன்:-** இதென்ன? திடீரெனப் புளகாங்கிதம் உற்றேன்?

**சீதை:**-அவ்விதம் வெளியேற்றப் பட்ட நான் இவ்விதம் துணிசெய்ப்புரிந்து உண்மையிலேயே அஞ்சுகிறேன்.

**இராம:**-[புலம்பி] அரவணைத்துக்கொள் வைதேகி!

**சீதை:**- குற்றமற்றவளானேன்!

**இராம:**- எனக்குக் காட்சிதரமாட்டாயோ! அன்பே!

**சீதை:**- முனிவர் சாசனம்! துர்ப்பாக்கியசாலி நான் என்ன செய்ய முடியும்

**இராம:**- நீண்ட கோபத்தை விடுக!

**சீதை:**-நானும் அண்ணலிடம் அதையே விண்ணப்பிக்கின்றேன்.

**இராம:**- என்னிடம் ஏன் அருள் இல்லையா?

**சீதை:**-அண்ணலே! இவ்வசை முரண்பாடல்லவா?

**இராம:**- தேவி! உன்பால் விண்ணப்பம்...?

**சீதை:**-கேட்கிறேன்! சொல்லுக!

**இராம:**-நீ கற்பொழுக்கம் மிக்கவள்!

**சீதை:**- ஆகா! உயிர்விடாதது தகுந்ததே!

**இராம:**- உன்னைக் காட்டிற்குத் துரத்தினேன்!

**சீதை:**- அண்ணலுக்குத் தன் எல்லா ஏவலர்பாலும் எதுவும் செய்யலாம்!

**இராம:**-அத் தவற்றினை மறந்து மன்னித்தருள்வாயாக!

**சீதை:**-நீயே அருளவேண்டும்! நான் என்றும் உன்னவள்தான்.
**இராம:**- மெல்லமளியில் (மென்துகில் விரித்தபடுக்கையில்) தோளே தலையணையாக உன்னோடு முழுமதியிரவுகளைக் கழித்த அந் நாட்கள் மீண்டும் வருமா?

**சீதை:**-ஓ! மக்கள் பழிச் சொற்கஞ்சியவனே! உன்னருகிலிருக்கும் போதே விரகத்தில் வருந்துகிறாய்.

**இராம:**- ஆ! அன்பே! ஜனக மன்னன் மகளே! பதில் கூறமாட்டாயா?

[மயக்கமுறுகிறான்]

**சீதை:**-அந்தோ! அண்ணல் மீண்டும் மூர்ச்சையுற்றான். ஆற்றுவிப்பேன். [முந்தானையால் விசிறுகிறாள் ]

**இராம:**- [கைநீட்டி முந்தானையைப் பிடித்து] முந்தானைபோல தோன்றுகிறது! யாருடையதாயிருக்கும்? [ஆராய்ந்து] ஜனகன் மகள் தேவியின் முந்தானைக் காற்று மட்டுமே என் உடலைத்தீண்டி உணர்வூட்ட முடியும்? வேறு யாரும் இருக்க முடியாது. ஆதலின் பார்க்கிறேன் [கண்களைத்திறந்து] இடையறாத கண்ணீர் ஒழுக்கினால் பார்வை மறைக்கப்பட்டு ஒன்றும் தெரியவில்லை. ஆதலின் இந்த ஆடையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.

[அப்படியே உத்தரீயம் இழுத்து கண்ணீரைத்துடைக்கிறான்]

**சீதை:**- [மேலாடையை விடுக்கிறாள்] அண்ணலே! காதற்கலைஞன் போல பிறன்மனை மேலாடையால் நீ கண்ணீரைத் துடைத்தல் தகாது.
**இராம:**- [மேலாடை வீழ்வதுகண்டு] மேலாடை மட்டுமே காண்கிறேன். கீழுடை காண்கிலேன். யாருடையதென்று

ஆராய்ந்து பாராமல் உணர்ச்சி வேகத்தில் பற்றி ஈர்த்ததால் நிலவும், பாம்புரியும் போன்ற அழகிய இம்மேலாடை வானிலிருந்து வீழ்ந்தது. [மீண்டும் பார்த்து] முன்பின் பாராது என்னை ஏன் குறைகூறிக் கொள்ளவேண்டும். இது சித்திரகூட வன தேவதை மாயாவதியால் தரப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. சூதாடும்போது பந்தயப் பொருளாகவும், காதற்களியாட்டத்தின் போது கழுத்துக்கயிறாகவும், இரவில் கலவிப்போர்க்கு விரிப்பாகவும் அமைந்த மான் விழியாளின் மேலாடை விதிப்பயனால் எனக்குக் கிடைத்தது.

**சீதை:-** அண்ணல் அடையாளம் கண்டுகொண்டான்.

**இராமன்:-** காதலியின் விருப்புடைய இதனை எப்படிச்சிறப்பிப்பது? [சிந்தித்து] நன்று! இதற்கிதுவே சிறந்த பரிசு! [போர்த்துக் கொண்டு, பார்த்து] இரண்டு போர்வைகளையுடைய என்னைப்பார்த்து முனிவர்கள் ஏதாவது நினைக்கக் கூடும். ஆதலின் எனது மேலாடையை விட்டுவிடுகிறேன். [விட்டுவிடுகிறான்]

**சீதை:-** [மகிழ்ச்சியுடன் எடுத்து] நெடுநாட்பிரிந்து வாழ்ந்ததற்கு பரிசு பெற்றேன். [முகர்ந்து] இது மணம் ஊட்டப் படுதலில்லா அண்ணலுடைய மேலாடை! இராகவன் என்றும் சத்திய சந்தன் தான். [போர்த்துக் கொண்டு] ஆகா! இந்த அன்புடையவரின் சுகபரிசத்தால் சிறப்புற்ற இம் மேலாடையைப் போர்த்துக் கொண்டதும், அண்ணலின் மார்பினைத் தழுவியது போன்ற செறிந்த புளகம் உறுகின்றேன்.

**இராம:-** என் மேலாடை கீழ்விழுமுன்பே யாரோ கவர்ந்தனரே! ஆதலின் எனது விருப்பம் ஈடேறலாம்: [ஆலோசித்து] மேலாடை கவர்வது நிழலில் தெரிந்தது.

ஆகையால் சீதையன்று! என்ன இது விசித்திரமாக இருக்கிறது. இது சித்தாசிரமத்தில் வசிப்போரின் தவ ஆற்றலா? ஆகட்டும்! தேவியின் முகதரிசனத்திற்கு உபாயம் என்ன? ஓ! வைதேகீ! பழைய செய்திகள் ஒன்றும் உனக்கு நினைவில்லையா? எனக்குத் தரிசனம் மட்டுமாவது தரக்கூடாதா?

**சீதை:-** இப்போதும் பழைய கதைகள் துழாவுவதேன்?

**இராம:-**மெல்லியலே! சித்திரகூடத்தில் ஒரு நாள் நீ பூக்கொய்யச் செல்லும் போது உனக்குத்தெரியாமல் வந்துபற்ற, பறித்த மலர்கள் நிலத்தில் சிந்தும்போது ஆடைநுனியால் நான் ஏந்தினேனே நினைவிருக்கிறதா?

**சீதை:-** [நகைத்து] துணிவுடையோய்! அதனால்தான் இவ்வுளவு தூரத்துக்காளானேன்!

**இராம:-** பதில் சிறிதேனும் தரக்கூடாதா?

**சீதை:-** எனக்கும் பொழுதுசாயும் நேரமாய் விட்டது. இந்த நிலைமையிலுள்ள அண்ணலைத் தனியே விட்டுச் செல்லவும் மனதில்லை. இப்போது என்ன செய்வது? [சுற்றுமுற்றும் பார்த்து] பாக்கிய வசத்தால் இதோ அண்ணலின் இனிய தோழன் கௌசிகன். உற்சாகம் பொங்கும் கண்களுடன் ஏதோ தேடுவது போல இப்பக்கம் வருகிறான். ஆதலின் செல்கிறேன்.

[செல்கிறாள்]

[அப்போது தேடிக்கொண்டே விதூஷகன் வருகிறான்]

**விதூ :-** மன்னன் எங்கே இருக்கிறான் [நடந்து பார்த்து] இனிய

தோழன் இப்பொய் கைக் கரையில் கவலையுடன் எழில் திருமேனி தோன்ற அமர்ந்துள்ளான். அருகே செல்கிறேன்[அருகடைந்து] மன்ன! வெல்க!

**இராம**:- [பார்த்து] ஓ! இனிய தோழன் கௌசிகனா? வருக! வருக! நீ யெங்கிருந்தாய்?

**விதூ** :-பொழுது புலர்ந்தது முதலாக உன்னைத் தேடிக் கொண்டிருந்து பொழுது சாயும் போது உன்னைக் கண்டுபிடித்தேன்.

**இராம**:-என்னைத்தேடும் வருத்தம் ஏன் ஏற்பட்டதோ? பாவம்!

**விதூ** :- இன்று அதிகாலை யாருமில்லாத போது முனிகன்னிகையரும் நீரரமகளிரும் (அப்ஸரஸ்) ஏதோ ஒரு தபோவன ரகசியம் மறைவாகப் பேசுவதை, நான் பூம்புதர் மறைவிலிருந்து கேட்டேன், அது உனக்குப் பிடிக்காதது! உட்புதைந்துள்ள ரகசிய கர்ப்பம் போல அது என்ன மிகவும் துன்புறுத்துகிறது.

**இராம**:-அந்த தபோவன ரகசியம் என்ன?

**விதூ** :- அடடே! தெரியாதா? அந்த வானரமகளிர்....!

**இராம**:- [காதைப் பொத்தி] பெண்களைப் பற்றிய ரகசியமா? அதைக் கேட்டது போதும்?

**விதூ** :- அஞ்சற்க! நான் இராமனுடைய தோழனல்லவா? அந்த புராண சுவர்க்க தாசியிருக்கிறாளே!

**இராம**:-[தனக்குள்] இக் கதை வானகக் கணிகையர் சம்பந்தப் பட்டதா? அப்படியானால் கேட்பதில் தவறில்லை.

[வெளிப்படையாக] அது யார்? ஊர்வசியா? திலோத்தமையா?

**விதூ** :- திலோத்தமையா? கிலோத்தமையா? அதெல்லாம் தெரியாது. அவள் நெடு நாட்பிரிந்துள்ள வைதேகியின் உருவத்தைத் தாங்கி உன்னைக் கேலிசெய்ய விரும்பினாள்!

**இராம**:-[தனக்குள்] அந்தோ! கஷ்டம்! கௌசிகன் சொன்னது சரிதான். இல்லாவிட்டால் அப்படி சீதையின் நிழல் தோன்றி, அவள் நிஜ உருவம் தோன்றாதிருக்குமா? இது மானுடர் செயலன்று! காமரூபிணி (விரும்பிய உருவெடுக்கும்) திலோத்தமையின் செயலால் முழுதுமாக மோசம் போனேன்!

தாகம் கொண்டு பாலைவனக் கானல் நீரைத்தெளிந்த நீரென நம்பிக் கைகுவித்துக் குடிக்கச் சென்று மருளுற்றவனானேன் நான்!
[மேலாடையைப் பார்த்து] அந்த மாயாவியின் செயல்தானா இந்த மேலாடையும்? அடே! பிறரை வஞ்சிக்கும் திறன் தான் என்னே?

**விதூ** :- நண்பா! முகம் வேறுபாடுற்றது போல் தெரிகிறது. அவளால் வஞ்சிக்கப்பட்டாயா என்ன?

**இராம**:-ஆம்! வஞ்சிக்கப்பட்டேன்.

**விதூ** :- பின் நான் கேட்ட ரகசியம் வீண்போகுமா?

[திரையில்]

பகைவரையடக்கும் மன்னரைப் போலக் கதிரவன் உலக முழுவதும் சுட்டெரித்து, முதலில் தீவிரமாக இருந்து, பின் வயதானதும் அமைதி பெறுதல் போல மாலையில் மென் கதிர்களுடையவனாய் சூடுதணிந்தான்.

இராம:-[பார்த்து] பகவான் சூரியன் அஸ்தமித்தான். கதிரவன் கதிர்கள் ஒவ்வொன்றாக மறைய மறைய பொய்கைத்தாமரை மலரிதழ்கள் ஒவ்வொன்றாக காதலர்ப் பிரிந்தவர் தம் விரல்களால், தவணை நாளை எண்ணும் போது விரல் மடங்குவது போல இதழ்கூம்பின. மேலும், கரையேற்றும் அருண சாரதியால் கடிவாளத்தால் இழுக்கப் பட்டும், சாட்டையால் துரத்தப்பட்டும், நிற்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் தடுமாறும் கால்களுடன், அஸ்தகிரி முகட்டில் கால் வைக்கச் சிரமப்பட்டுச் செல்லும் சுடுகதிரகள் எனும் குதிரைகள் திறன் மிகுந்ததாய் கடலில் மூழ்குகின்றன.

..........



## குந்தமாலா

## ஐந்தாம் அங்கம்

[விதுஷகன் வருகிறான்]

**விதூஷகன்:-** [திரைப்பக்கம் பார்த்து] தவமுனிவர்கள் வரும் நேரம் ஆயிற்று. நீ விரைந்து வருக !

[இராமன் வருகிறான்]

**இராம:-**நீராடி, வேள்வி செய்து, உதிக்கும் கதிரவனைத் தொழுது காலைக் கடன்களாற்றி விட்டு, நான் முனிவர்களை வணங்க வருகிறேன்.

**விதூ :-** இதுவே ஆஸ்தான மண்டபம். வருக!

**இராம :-** [வந்து வருத்தமுடன்] ஆ! நேற்று நடந்தவை எல்லாம் எத்தனை வியப்பானது?

தெளிந்த நீரில் தாமரைக் கண்ணினாளை, நீண்ட கூந்தலும் வெளுத்த கன்னமும் உடைய எழில்மிக்க இனிய முகத்தை நான் கண்டேன். எனினும் அது திலோத்தமையின் பரிகாசச் செயல் என்றுணர்ந்தேன். முல்லைப் பூமாலை அவள் கட்டியது போலவே இருக்கலாம். மணலில் அவள் காலடிபோலவே இருக்கலாம். நிழலும் தேவ கணிகை உருவாக்கியிருக்கலாம். ஆனால் அந்தோ! மேலாடைக்

காற்று இராமனை எப்படித் தீண்டி உணர்வூட்டமுடியும்?

[வருந்துகிறான்]

**விது** :- கவலையில் மூழ்கியிருக்கிறான். அருகமர்ந்து தேற்றுகிறேன். [அமர்ந்து] ஓ! நண்பா! அங்கும் இங்கும் இருக்காதே! புது பனிக்கார்முகில் என, (மின்போன்ற) முத்துமாலையணிந்து, மிக உயர்ந்த, ஏறற்கரிய இந்திர நீல மணித்தூண்களில் ஒன்று என நான் மயங்கும் படியாக இருக்கிறாய்! உன்னைச் சேவிப்பதற்காக உலகின் நாற்றிசைகளிலிருந்தும் வந்துற்ற மன்னர்களின் இன்குரலால் நிறைந்த இந்த லட்சுமி நிவாச பவனத்தின், பொய்கை போன்ற ஆஸ்தான மண்டபத்தில், தாமரை போன்ற கொலுமண்டபத்தில், பொகுட்டினை ஒத்த சிம்மாசனத்தில், திருமால் உந்திக் கமலத்தில் வீற்றிருக்கும் நான் முகன்(பிரம்மா) போல அமர்ந்து இருப்பாயாக!

**இராம**:- நீ சொன்னபடியே அமர்கிறேன் [அமர்ந்து வருந்துகிறான்] இன்று எனக்குப்புதிதாக சுகதுக்கங்கள் அனுபவத்திற்கு வந்து உணர்ச்சியுள்ளவனாக இருக்கிறேன். [தியானத்தில் மூழ்கி மார்பில் கை வைத்துக் கொண்டு ] இது நாள் வரை, சலனமற்ற என் மனத்தில் இன்பமோ துன்பமோ அடைந்ததில்லை. இன்று நிழலைக் கண்ட பின்னர் என் மனத்தில் சுகமும் துக்கமும் மீண்டும் உண்டாகியுள்ளது.

[வருந்துகிறான்]

**விதூஷகன்**:-[பார்த்து தனக்குள்]இவன் உட்கருத்து என்னவென்று புரிந்து கொள்கிறேன் [வெளிப்படையாக] அரசே! இந்த ஆசனச் சிங்கங்கள். மிகுந்த பாரம் சுமத்தலால் ஏற்பட்ட சிரமத்தால் வாய் வழியாக முத்துமணிகள் என்னும் நுரைகக்குவது போலிருக்கிறது. உன் தோள்களில் நிலத்தையும் இதயத்தில் நிலத்தின் மகளான சீதையையும் ஏந்தி நிறை (பாரம்) மிகுந்தவனாய் என்று கருதுகிறேன்.

**இராம:-** [தனக்குள்] கௌசிகன் சீதையைப் பற்றிப் பேசி தான் ஏதோ தெரிந்து கொள்ளும் ஆர்வத்தைப் புலப்படுத்துகிறான். இவன் பாலிய நண்பன். ஆதலின் இவனிடம் உள்ளதுள்ளபடி சொல்கிறேன். [வெளிப்படையாக] நண்பா! உண்மைதான்! வைதேகியை சதா நினைத்துக் கொண்டே இருக்கிறேன்.

**விதூ :-** குணத்தாலா? குற்றத்தாலா?

**இராம:-** குற்றத்தாலோ குணத்தாலோ அன்று.

**விதூ :-** இவ்விரண்டாலுமின்றி திருவாட்டிகளை (சீமந்தினி) எப்படி நினைப்பது?

**இராம :-** காதல் உணர்ச்சிவேகங்கள், காரண சம்பந்தங்கள் எல்லாம் பிற தம்பதியர் விஷயத்தில்தான். சீதாராமர்களிடத்தில் அப்படியில்லை.

சுகதுக்கங்களில் மறைத்தலின்றி, தன்னைப் போலவே பரஸ்பரம் மதித்து, குண தோஷங்களைப் பொருட்படுத்தாது காரணங்களின்றியே எங்கள் கருத்தொற்றுமை நிலைபெற்றிருந்தது.

**விதூ :-** இத்தகைய பொய்யான இன்மொழிகளால் எங்களைப் போன்றவர்களை (சீதையையும்) வஞ்சிக்க வேண்டாம்! நீ உண்மையாகவே தேவியை ...!

**இராம:-** சீதை விஷயத்தில் ராமன் உதாசீனன் என்று நீ கருதுவது கூடாது.

உள்ளே அன்பினால் நிறைந்தும் வெளியே கடுமையாகத் தோற்றமளிக்கிறேன். தாமரைத் தண்டு வெளிக்கு கரடு முரடாகத் தோன்றினும் உள்ளே மெல்லிய

நூலிழைகள் உள்ளதல்லவா?

**விதூ :-** வடவைக் கனலை வயிற்றிலடக்கிய கடல் போல, நீ உள்ளுக்குள் துயரத்தால் குமைந்தாலும் வெளிக்காட்டாது நின் பெருமையால் சமாளித்துக் கொள்கிறாய்! நானோ இயல்பாகச் சிறியவன். சீதையின் கதியை நினைந்து வடவைக் கனலில் வீழ்ந்த பனித்துளி போல வற்றிவிடுகிறேன். என்னைக் காப்பாயாக. [அழுகிறான்]

**இராம:-** நீ சீதையை இத்துணை உயர்வாக மதித்து நினைவதானால், அவளை நீக்கும்போது ஏன் தடுக்கவில்லை?

**விதூ :-** அரசன் மகிழ்ச்சியோடு இருக்கும்போதே சேவகர்கள் ஒன்று விண்ணப்பிக்க இயலாத போது சினத்தோடிருப்பவனிடம் என்ன சொல்ல முடியும்?

**இராம:-** [என்போன்றோர்] நண்பர்கள் கூறும் சொற்களைக் கேளாத சினமிக்கவர்கள் அன்று.

மிகுந்த ஆற்றலுடன் இயங்கும் மன்னனை மந்திரி தடுத்தல், உலகை ஆயிரங் கதிர்களுடன் சுட்டெரிக்கும் கதிரவனைக் கார்முகில் மறைப்பது போலத்தான். நண்பா! சீதையைப் பற்றி பேசுவது இருவருக்கும் வருத்தத்தைத் தருவதொன்றாகும். ஆதலின்காவலர்களை எச்சரித்து "தபோதனர்கள் வரும் நேரமாயிற்று. எச்சரிக்கையுடன் காவலர்கள் இருக்குமாறு" கட்டளையிட்டுவா!

**விதூ :-** மன்னனே! காய்கிழங்குகள் தின்று, மரவுரிதரித்து தண்ட கமண்டலங்களுடன் இருக்கும் இவர்களை ஏன் இவ்வளவு மரியாதை செய்யவேண்டும்.

**இராம:-** உன் ஐயம் தகுந்த தன்று. எல்லாப் புருஷார்த்தங்களையும் நன்குணர்ந்த, தத்துவ ஞானிகளாகிய

இவர்கள் ஆன்ம ஞானமே நமக்கு மூலபலமாகும். பார்! இம்முனிவர்கள் தூண்டுதலால்தான் இன்னும் உள்ளொளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. நெருப்பு சுடர்விட காற்று துணையாவது போல நம் ஆற்றல்கட்கு ஊற்றாவார் இவர்களே!

***விதூ:-*** முனிவர்கள் வருகை இத்துணைச் சிறப்புடையதெனின் விரையில் உன் கட்டளையை நிறைவேற்றுவேன். [சென்று, திரும்பிவந்து] ஆகாகா! அப்போது அரசனாணையை அங்கு இரு முனிகுமாரர்கள் தோரணவாயிலில் இருக்கக் கண்டேன். அவர்கள் தம் கலைத்திறனை நண்பனுக்குக் காட்ட வந்தார்களாம். மென்னையான கருநிறமுடையவர்களாக, இளம் பருவம் எய்தியவர்களாய், மங்கல தோரணஸ்தம்ப முளைகளென, பிழைகாணற்கியலாத சிறுவர்களாய், எழிலில் மன்மதனின் குமாரர்கள் என மயங்கும்படியான ஜீவகளையோடு கூடியவர்களாய், வலிவும் பொலிவும் துடிப் பும் உடைய நல்லிளம் பாலகர்களாய், அகன்ற மார்புடையவர்களாய் கண்விருந்தளித்துக் காட்சிதருகின்றனர்.

***இராம:-*** நம் முன் வருவதற்கு தடை என்ன உள்ளது?

***விதூ :-*** பாலகர்களாகிய அவர்களைப் பற்றி உனக்கு குதூகலம் பிறந்தது. முதலில் அவர்களைப்பற்றி அறிமுகம் செய்கிறேன்.

***இராம :-*** சொல்! சொல்!

***விதூ :-***அவர்கள் வால்மீகி முனிவரின் சீடர்கள். யாழிசையில் வல்லவர்கள். அபூர்வமான ஆகமங்களைக் கற்றறிந்தவர்கள். அவர்கள் இப்படிக் கூறுகின்றனர்:"ராஜரிஷி போன்ற தங்கட்கு தபோதனர்கள் மரியாதைக் குரியவர்கள் ஆதலின், நாங்கள் கீழே அமர ஆசனம் ஏற்பாடு செய்வீர்களாக! நாங்கள்

ஒரு மகாகவி இயற்றிய காவியத்தை யாழிசையோடு இசைக்கின்றோம். அக் காவியம் ஒரு மகாபுருஷ சரிதமாகும். பொருட் சிறப்பும், அரிய அமைப்பும், இசையோடு கூடிய அபூர்வமான மறையெனத்தக்கதாகும். யோக சக்தியால் வர்ணிக்கப்பட்ட எழில்மிக்கது. சுவைமிக்கது. எப்போது அ ர ச ன் இ க் க லை யை ச் சு வை ப் பா னோ , ம கி ழ் ச் சி யு ட னி ரு ப் பா னோ செ வ் வி ய றி ந் து சேர்ந்திசைப்பீர்களாக" என்று பகவான் வால்மீகியின் கட்டளையாகும்.

**இராம** :- ஓகோ! செருக்கும் தெளிவும் உடைய இச் சொற்பொழிவு அவர்திறனைத் தெளிவாக்குகிறது. அவர்கள் விரும்பியபடி ஆகட்டும். விரைவில் வரச்சொல்! நெடுநேரம் காக்க வைத்தால் திரும்பிச் சென்றுவிடலாம்.

**விதூ** :- அதொன்றுமில்லை. பாலகர்களின் பரஸ்பர வாத்சல்யம், உருவ ஒற்றுமை, சுருள் மயிர்க்கற்றையோடு கூடிய முகம் கண்ட நம் அந்தப்புரக காவலர்கள்" மகாராஜா தசரதன் இருந்தபோது இராம லட்சுமணர்கள் ஆஸ்தானத்தை இப்படித்தான் அணிசெய்தனர் என்று நினைந்து கண்ணீர் சுரந்த கண்களோடு அருகில் உள்ளனர்.

**இராம** :- அவர்கள் உருவம் எம் குழந்தைப் பருவத்தை நினைவூட்டுகிறதா?

**விதூ** :- ஆம் !

**இராம** :-என் குதூகலம் (ஆர்வம்) மிகுகின்றது. விரைந்தனுப் புக.

**விதூ** :- அப்படியே. [செல்கின்றான்]

[விதூஷகன் வழிகாட்ட குசலவர்கள் வருதல்]

**விதூ** :-இதோ! இதோ! [நடக்கின்றனர்]

**குசன்**:-[தடுத்து] குழந்தாய் லவா! நாம் வால்மீகி பகவானின் ஆணைப்படி மன்னரைக் காணப் புறம்படும் போது வாழ்த்துப் பெற அம்மாவிடம் சென்றோமே! அப்போது உன் சுரிகுழல் நீவி அம்மா உன்னிடம் ஏதோ சைகை செய்து குடிலுட் சென்று தனித்து ஏதோ ரகசியமாகச் சொன்னாளே! அதென்ன?

**லவ**:- வேறொன்றுமில்லை. முனிவர்கள் சூழ்ந்திருந்தமையால் குடிலுட் புகுந்து, அம்மா என்னை ஆரத்தழுவி, உச்சி மோந்து முத்தமிட்டுப்புன்னகையுடன் மெல்ல மெல்லச் செவியருகே என்முகத்தோடு தன்முகம் வைத்து இவ்விதம் கூறினாள்! குழந்தாய்! இளம் பருவத்தியல்பான செருக்கினைக் கைவிட்டு மன்னரைக் கண்டு நலம் நாடி வணங்கவேண்டும்.

**குச**:- நலன் நாடுவது சரி! வணங்குவது ஏன்?

**லவ** :- ஏன் என்றால்?

**குச** :- நம் குலத்தவர் யாருக்கும் தலைவணங்கார் அல்லவா?

**லவ**:- யார் சொன்னது.

**குச** :- அம்மா தான்.

**லவ** :- வணங்குமாறும் அம்மாதான் சொன்னாள். பெரியோர் கட்டளையை ஆராய்தல் கூடாது.

**குச**:- போகிறோமல்லவா? அங்கு உசிதப்படி

நடந்துகொள்வோம்.

[நடக்கின்றனர்]

**விதூ** :- இதோ! இதோ! இவ்வழி !

**இராம**:- [பார்த்து] அச்சிறுவர்கள் இவர்களே! கௌசிகன் வழிகாட்ட இதோ வருகின்றனர். என்ன இது! திடீரென என் கண்களிலிருந்து கண்ணீர் வருகிறது. ஏன் இது?

இவர்கள் யாரென்றும் தெரியாது. ஏன் வருகின்றனர் என்றும் தெரியாது. எனினும் இவர்களைக் கண்டதுமே கண்ணீர் வருகிறதே. அதில் வியப்பென்ன உள்ளது? உறவுடையோரைக் கண்டதுமே அறிவுறும் முன்பே உணர்ச்சி பொங்குதல் படைப்பின் இயல்பாகும் குணதோஷங்களை ஆராய்ந்தா பாசம் உருவாகிறது? சந்திரன் உதயமானதுமே சந்திரகாந்தக்கல் உருகுவதில்லையா? அவர்கள் உருவம் எப்படியுள்ளதெனப் பார்க்கிறேன். என்ன பார்க்கக் கூட முடியவில்லையே! இவர்களைக் காணமுயலும் போது எல்லாம், இதயம், பயம், மகிழ்ச்சி, வருத்தம், இரக்கம் அகிய உணர்ச்சிகளால் பிணிப்புண்டு எப்போதுமில்லாதவாறு சிதறிவிடுவதுபோல மயங்குகிறேன். [மயங்கி] என்னிது கண்ணீரொழுக்கு? கண்ணீர்விட்டதால் இதயம் தெளிவடைந்து மீண்டும் நான் நானாக இல்லை . கண்ணீர் இல்லாத போது மீண்டும் இவர்களைக் காண்கிறேன். [பார்த்து] உடற்கட்டெழில், மனங்கவர் தோற்றப் பொலிவு, உதார குணம், நடையிலடக்கம், எல்லாம் கண்டால் நிச்சயம் இவர்கள் உயர் குடிப்பிறப்பாளர்கள் தான்.

**விதூ** :- இவரே மன்னர்! தகுமுறையில் அருகணைக!

குச :- குழந்தாய் லவா! இதற்கு முன்பே வணங்குவது குறித்து நான் சொன்னது நினைவிருக்கிறதா?

**லவ** :- ஆம்! இப்போது எதற்கு?

**குச** :- மன்னரை அருகடைந்ததுமே என் இதயம் நடுங்கி என்னை நானே சமாளிக்க முடியாதிருக்கிறேன். செருக்கு என்னைவிட்டகன்றது எப்படியோ? இம் மன்னன் முன் குனிந்த தலை நிமிர முடியாதிருக்கிறேன். அதிகம் கூறலேன் நான் வணங்குகிறேன்.

**லவ** :- அண்ணாவும் என் போலவே பரவசமாகிவிட்டானா.

[வருந்துகிறான்]

**விது** :- ஏன் வருந்துகிறாய்? அவர்கள் வணங்கியதாலா? அதை ஏற்கவில்லையே! ஆதலின் நின்பாற்குற்றமில்லை.

**இராம** :- கௌசிகன் கூறியது சரியே! மிகு கண்ணோட்டமும் மென்மையும் உடையவர் அந்தணர் அன்றோ? நீங்கள் விரைந்து தலைவணங்கிய வணக்கம் என் விருப்பப்படி உங்களது குருபாத கமலங்களில் காணிக்கையாக்குகிறேன்.

**விதூ** :- இனியதோழனின் கட்டளைக்கு மாறுண்டோ? இந்த வணக்கத்திற்கு ஏற்ற பிரதிச்செயல்தான்.

**குச, லவ**:- [எழுந்து] மன்னர் நலந்தானே!

**இராம** :- உங்கள் வரவால் நலமேதான். நலம் உசாவினால் மட்டும் போதுமா? விருந்தினற்குரியபடி ஆரத் தழுவிடாதேன்? வருக! [தழுவி] ஆகா! இதயத்தை ஈர்க்கும் பரிசம்! [சிந்தித்து] எனக்குப் புதல்வரைத் தழுவுமின்பம் தெரியாது. எனினும் அத்தகு இன்பம் பெறுகிறேன். இல்லறத்தார் தபோவனங்கட்கு வராததன் பொருள் புரிகிறது.

[பாதி சிம்மாசனத்தில் அமரவைக்கிறான்]

**இருவர்** :-இது அரச ஆசனம். இதிலமர்தல் எமக்குத் தகுந்ததன்று.

**இராம** :- மடியில் அமர்ந்து இருந்தால் குற்றமில்லை.

[மடியில் அமர்த்துகிறான்]

**இருவரும்** :- [விரும்பாமல்] அரசே! மிகு கண்ணோட்டம் வேண்டாம்

**இராம** :- மிகு வினயமும் (அடக்கமும்) வேண்டாம்! தாம்குணத்தால் பெரியவரேனும் குழந்தைகள் வயதைக் கருதி கொண்டாடத்தக்கவர்கள் அல்லவா? சிவன் தன் தலைமுடியில் குழந்தைமையைக் கருதியன்றோ பிறைமதியைச்( தாழம்பூவோடு) சூடிக்கொண்டான்.
[கண்ணீருடன் கண்டு மீண்டும் தழுவிக் கொள்கிறான் ]
[விதூஷகனைப் பார்த்து] சீதையை வெளியேற்றி எத்தனை ஆண்டுகள் ஆயிற்றென நினைவிருக்கிறதா?

**விதூ** :- [சிந்தித்து] பாக்கியமிலாதேன்! நினைவுகூர்கிறேன். [கைவிரல்களை எண்ணிக் கால்விரல்கள் மூன்றும் எண்ணி] இந்தக் கணக்கால் பயனென்ன? உங்கள் கையால் சீதையை வெளியேற்றி எப்படியும் பத்தாண்டுகள் இன்றோடாகிறது.

**இராம** :-[குமாரர்களைக் கண்டு] சீதை சுகப்பிரசவம் எய்தி அம்மக்கள் இருந்தால் சரியாக இந்த வயதிருக்கும் அல்லவா?

**விதூ** :- அந்தோ! தெரியாத (பிறவாத) குழந்தைகள் கதையைக் கேட்டு என் உள்ளம் மரத்துவிட்டது.[வருந்துகிறான்]

**இராம** :- நானும் இந்த முனி குமாரர்களைப் பார்த்து நோக்கி தாங்கரிய துன்பம் அடைந்துள்ளேன்.

தன் மகனைப் பிரிந்தவன், தன் மகன் போன்ற வயதை அடைந்தவனைக் காணும் போது, உள்ளம் உருகி வருத்தமடைவது இயல்பேயாகும். [தழுவி அழுகிறான்]

**விதூ** :- [திடுக்கிட்டு] அடடா! விடுக! விரையில் விடுக! தவச் சிறுவர்கள் வாழ்க! சிம்மாசனத்திலிருந்து இறங்குக!

**இராம** :- [பரபரப்புடன் குமாரர்களை இறக்கி விட்டு] தோழா! என்ன இது?

**விதூ** :- ரகுகுலத்தவர் அன்றிப் பிறர் இந்த சிம்மாசனத்தில் ஏறினால் அவர்தலை சுக்கு நூறாக உடைந்து சிதறும் என்று சாகேதத்திலுள்ள வயது முதிர்ந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

**இராம** :- [விரைந்து] விரைவிலிறங்குக!

[இருவரும் இறங்கி கீழே அமர்கின்றனர்]

**இராம**:- நீங்கள் நலந்தானே ! தலையில் ஒன்றும் செய்யவில்லையே!

**இருவர்**:- நலமேயுள்ளோம் ! தலையில் எந்த விவகாரமும் இல்லை!

**விதூ** :-என்ன ஆச்சரியம்! ஆச்சரியம் ! இவர்கள் எந்த ஒரு தீங்குமின்றி உடல் நலமுடன் உள்ளனர் .

**இராம** :- இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? [குமாரர்களைக் காட்டி ] தவமுனிவரின் உடல்கள் ஸ்வஸ்தி வாரக மந்திர கவசமுடையதல்லவா?

தவவலிமை பெற்ற முனிவர் உடலில் இந்திரனின் கோடியிடியேறுகளே ஒன்றும் செய்ய இயலாத போது வெறும் கூரம்புகள் என்ன செய்துவிடும்? [குமாரர்களைச் சுட்டி] நீங்கள் ஒரே இடத்தில் வசிக்கிறீர்களா?

**இருவ** :- மாமன்ன! இது முன்பே நிச்சயிக்கப்பட்டதேயாம்.

**இராம** :- ஆம் ! அப்படியே!

விதூ :- மன்ன ! இவர்கள் அதிதிகள் (விருந்தாளிகள்). நன்கு பேசி மகிழ்விக்கவும்.

இராம :- உங்கள் அழகைக் கண்டதால் ஏற்பட்ட ஆர்வத்தால் கேட்கிறேன்! நீங்கள் பிறந்து சிறப்புற்ற வருணமும் தீட்சை பெற்ற ஆசிரமும் யாதோ?

குச :- [சைகையால் லவனைப் பணிக்கிறான்]

லவ :- இரண்டாம் வருணம் : முதல் ஆசிரமம்

இராம :- இவர்கள் முதல் வருணத்தார் அன்று. ஆதலின் இவர்கள் வணங்கியதாலோ, கீழமர்ந்ததாலோ எனக்கு குற்றமில்லை . க்ஷத்திரிய குலமானால் சூரிய சந்திரரில் எந்த மரபைச் சேர்ந்தவன்.

லவ :- பகவான் சூரியன்.

இராம :- என்ன ? எனது மரபினரா?

விதூ :- என்ன இருவருக்கும் ஒரே பதில்தானா?

இராம:- உங்களுக்குள் உள்ள உறவென்ன?

லவ :- உடன்பிறந்த அண்ணன் தம்பிகள்!

இராம :- உடலமைப்பு ஒன்று போலுள்ளது! வயதில் வித்தியாசமுண்டா ?

லவ :- நாங்கள் இரட்டையர்கள்
இராம :- சரித்தான் ! யார் பெரியவன்? பெயர் என்ன?

லவ :- [கைகூப்பிக்காட்டி] பெரியோர்களை

வணங்கும்போது லவன் என்று என்னைக் கூறுவேன். அண்ணலும் குருசரணங்களை வணங்கும்போது. [கலக்கமுறுகிறான் ]

**குசன்** :- என்னை நான் குசன் என்று கூறிக் கொள்வேன்.

**இராம** :- என்னே உயர்ந்த பண்பாடு! ஒழுக்கசீலம்!

**விதூ** :- பெயர் தெரிந்தது. பெரியவன் யார் என்று பதில் கூறவில்லையே.

**இராம** :-கை கூப்பியதாலும் பெயர் சொல்லாததாலும் பதில் சொன்னதாகிவிட்டது. குசன் பெரியவன் என்று.

**விதூ** :- இப்போது நன்றாகத் தெரிந்து விட்டது.

**இராம** :- உங்கள் குருவின் பெயர் என்ன?

**லவன்** :- வால்மீகி மகரிஷி தான்.

**இராம** :- எந்த தொடர்பால்,

**லவன்** :- உபநயன உபதேசத்தால்.

**இராம** :- அதுசரி. உன்னை ஈன்ற தந்தையின் பெயரைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**லவன்** :- பெயர் தெரியாது. எங்கள் தபோவனத்தில் யாரும் அவரை பெயர் சொல்லிப் பேசமாட்டார்கள்.

**இராம** :- என்னே ! பெருமை !

**குசன்** :- பெயர் எனக்குத் தெரியும்.

**இராமன்** :- சொல்க.

குச :- அருளிலான்!

**இராம** :- பெயர் புதுமையாக இருக்கிறதல்லவா?

**விதூ** :- [ஆலோசித்து] [தனக்குள்] இப்படிக் கேட்கிறேன். [வெளிப்படையாக] அருளிலான் என்று யார் அழைப்பார்கள்.

**குசன்** :- அம்மா.

**விதூ** :- கோபம் வரும்போதா? அல்லது இயல்பாகவா ?

குச :- குழந்தைத்தனத்தால் நாங்கள் பிடிவாதம் செய்யும் போதல்லாம் "அருளிலான் புதல்வர்களே! பிடிவாதம் வேண்டாம்" என்று கண்டிப்பாள்.

**விதூ** :- இவன் தந்தை அருளிலான் என்று இவர்தாயால் அழைக்கப்படுவதானால், அவனால் அவமானிக்கப் பட்டோ, வெளியேற்றப்பட்டோ இருக்கவேண்டும். ஆகையால்தான் அவள் இப்படிக் குழந்தைகளைக் கண்டிக்கும்போது அவன்பெயர் அப்படிக் கூறுகிறாள்.

**இராம** :- [தனக்குள்] கௌசிகன் சரியாகச் சொன்னான். [வெளிப்படையாக] [நெட்டுயிர்த்து]நானும் இப்படித்தானே! அத் தவமகள் நான் செய்த தவற்றுக்காக தான் பெற்ற பிள்ளைகளையும் அப்படித்தான் சினத்தால் கடுஞ்சொற்களால் கண்டிப்பாள் போலிருக்கிறது.[கண்ணீர் படிந்த கண்களுடன் பார்த்து] அந்த அருளிலான் உங்கள் ஆசிரமத்தில் தான் உளரா?

**லவ** :- இல்லை.

**இராமன்** :- [திடுக்கிட்டு] கேள்விப்பட்டதுண்டா?

[லவன் குசனைப் பார்க்கிறான்]

**குசன்** :- அவரை நாங்கள் முன்பு எப்போதும் வணங்கியதில்லை. அம்மா உயிர்த்திருப்பது அவருக்காகத்தான் என்று அவரது ஒரே சடை எடுத்துக் காட்டுகிறது.

**இராம**:- அவர் எப்போதாவது உங்களை முத்தமிட்டதுண்டா?

**குச** :- அதுவும் இல்லை.

**இராம** :- அந்தோ! எத்துணைக் கொடிய நெடும் பிரி வு. இது காறும் ஒருவரையோருவர் பார்த்தது கூட இல்லையாம்.[விதூஷகனிடம் தனியாக ] இவர்கள் தாயின் பெயரைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் தூண்டுகிறது. தபோவனப் பெண்டிரைப் பற்றி நான் விசாரிப்பதும் தகுந்ததல்ல. ஆதலின் என்ன வழி ?

**விதூ** :- [தனியாக ] பிராமணசாதி தடையின்றிப் பேசும் தகுதியுடையது. நான் கேட்கிறேன் [வெளிப்படையாக ] உங்கள் தாயின் பெயர் என்ன?

**லவன்** :- அவளுக்கு இரண்டு பெயர்.

**விதூ** :- எப்படி ?
**லவ** :- தபோவனவாசிகள் ' **தேவி** ' என்றும், பகவான் வால்மீகி "**வதூ**" (மருமகள்) என்றும் அழைப்பார்கள்.

**இராம** :- மகரிஷி வாயால் மருமகளே என்று அழைக்கப் பெறும் பேறு பெற்ற க்ஷத்திரிய குலமெதுவோ?

**விதூ** :- க்ஷத்திரிய குலம் மிகப் பரந்தது. இதில் யார் என்று தெரிந்து கொள்வது மிகவும் கடினம்.

**இராம** :- நண்பா! கொஞ்சம் இப்படி வருக!

**விதூ** :- [அருகடைந்து] ஆணையிடுக !

**இராம** :- இந்த குமாரர்களின் செய்தி எல்லாவிதத்திலும் நம்முடைய குடும்பக் கதையயைப் போலிருக்கின்றதல்லவா?
**விதூ** :- எப்படி?
**இராம** :- பார்! இவர்கள் வயது சீதையின் கர்ப்பத்தினைப் போலிருக்கிறது. அவர்களும் க்ஷத்திரிய சூரிய வமிசத்தினர். பிறக்கு முன்பே பிரிவுற்றவர்கள். சிம்மாசனத்தில் ஏறியும் ஒன்றும் ஆகவில்லை. தந்தை தயை இல்லாத கொடியன் என 'அருளிலான்' என்ற சொல் சுட்டிக் காட்டுகிறது .தாய்மையின் பெருமையை தேவி என்ற சொல் சுட்டி காட்டுகிறது. எல்லாவிதத்தும் இத்தகு ஒற்றுமையைக் கண்டு துர்ப்பாக்கியசாலியாகிய நான் மிகவும் மனம் வருந்துகிறேன். [கலக்கமுறுகிறான்]

**விதூ** :- இவர்கள் சீதையின் புதல்வர்கள் என்றா நீ கருதுகிறாய்!

**இராம**:- இல்லை! இல்லை! அந்தோ! தபோவனவாசிகளிடம் இத்தகு தொடர்பை எப்படிக் கூறுவது? ஏன் எனின் இவ்விரு குமாரர்களும் வயது, மரபு, கருநிறமேனி, முதலியவற்றால் மைதிலியின் மக்களைப் போன்றுள்ளதால், என்னைமிகவும் அலைக்கழிக்கிறது.

[வருந்துகிறான்]

[திரையில்]

யாரங்கே ! இக்ஷ்வாகு குல குமாரர்கள் குசலவர்களில் யாரிருக்கிறார்கள்.

இரு :- [கேட்டு] இருவரும் இங்கேதான் இருக்கிறோம்.

[மீண்டும் திரையில்]

ஏன் இதுவரைக்கும் கடமை மறந்துள்ளீர்கள்? வால்மீகி முனிவரினால் இயற்றப்பட்ட புராணபுருஷனின் கதையை இராமனிடம் இசைக்கும் படி பணிக்கப்பட்டுள்ளீர்கள். நண்பகல் நீராடவும் வேண்டும். காலம் கடத்தக் கூடாது.

இரு:- மாமன்ன ! உபாத்தியாயரின் தூதர்கள் எம்மை விரைவு படுத்துகின்றனர்.

இராம :- முனிவர் கட்டளை பெருஞ் சிறப்பளிப்பதாதலின் நானும் அதை மதித்து நடக்கிறேன். இசைக்கப்படுவதாகவும் உள்ளது. கவிஞனோ பழம்பெரும் தவமுனிவன். முதன்முதலாக இச் சந்தர்ப்பத்தில் சொற்களால் உலகுக்கு இறக்கப்பட்டதாகும். புகழ்மிகும் இக் கதையோ பத்மநாபனுடையதாகும். கேட்பவர் புனிதமுறுவர். மிகத்தெளிவுறுவதாகும்.

நண்பா! மானுடர்க்கிந்த சரஸ்வதி அவதாரம் எத்துணை அபூர்வமானது. நண்பர்களுடன் கூட அமர்ந்து கேட்க விரும்புகிறேன் ! அவை கூடட்டும் ! இலட்சுமணனை என் அருகே வரச் சொல்க! நெடுநேரம் அமர்ந்த துயரைச் சிறிது காலாற நடந்து தீர்த்து விட்டு வருகிறேன்.

[எல்லோரும் செல்கின்றனர்]

## குந்தமாலா

## ஆறாம் அங்கம்

[சேவகன் வருகிறான்]

**சேவகன்** :- கௌசிகன் வாயிற் சொன்ன மன்னரின் கட்டளையை நிறைவேற்றிவிட்டேன். உடையவரைக் காண்கிறேன். [பார்த்து] உடையவர் இருக்கிறார். வேதத்திரயம் (மும்மறை) மூலம் சிறப்புறும் அசுவமேத வேள்வி, போல, சிறந்த சீலமுடைய மூவருடன் கூட இதோ வருகிறார்.

[அப்போது குசலவ லட்சுமணர்களோடு இராமன் வருகிறான்]

[எல்லோரும் நடந்து வருகின்றனர்]

**சேவ** :-[அருகடைந்து] அண்ணல் வெல்க ! ஆஸ்தான மண்டபம் அலங்கரிக்கப் பட்டுள்ளது. இதோ சிம்மாசனம்.

[எல்லோரும் அமர்கின்றனர்]

**சேவ**:- மன்னர் இங்கு காண்பாராக ! இவர்கள் ரகுகுலத்தவர்கள்! நகர மக்கள், கிராம மக்கள், தங்கட்கு மரியாதை செலுத்துகின்றனர்.

**இராம**:- [கண்டு] இதென்ன? இங்கு திரை போடப்பட்டுள்ளது.

**சேவ** :- மன்ன ! இங்கு மாபெருந் தேவியர் கௌசல்யாதியர் மூவர் உள்ளனர். இங்கு பரத சத்ருக்ன லட்சுமணரின் துணைவியர் மூவர்.

**லட்சு** :- [சேவகனைச் சுட்டிக்காட்டி]அண்ணலே ! வைதேகி மாபெருந்தேவியரிலும், அல்லது துணைவியரிலும் சேர்க்கப்படவில்லை.

**இராம** :- [நெட்டுயிர்த்து] சேவகா ! செல்க ! உன்னிடத்தில் இரு.

**சேவ** :- அப்படியே. [செல்கின்றான்]

**இராம** :- ஐயன்மீர், ஆரம்பிக்கவும்.

**குசலவர்கள்** :- முன்னொரு காலத்தில் தசரதன் என்னும் சூரிய வமிசத்தில் மகாரதனாகிய அரசன், கோசலதேசத்தை புகழுடன் அறநெறியில் ஆண்டு வந்தான்.

**ராமலட்சுமணர்** :-யாரது. பெயரைப்பார்த்தால் தந்தையைப் போலிருக்கிறான்.

**குசலவர்கள்** :- கௌசல்யா, கைகேயி. சுமத்திரை எனும் மூவரை வாழ்க்கைத் துணைவியராக ஏற்றான்.

**ராமலட்சுமணர்** :- [மகிழ்ச்சியுடன்] நம் தந்தையையே கதாநாயகனாகக் கவிஞன் வருணித்துள்ளான்.

[இருவரும் இருக்கைவிட்டெழுந்து வணங்குகின்றனர்]

**குசலவர்**:- கௌசல்யை இராமனைப் பெற்றாள்.
[இலட்சுமணன் எழுந்து வணங்குகிறான்]
கைகேயி பரதனையும்,சுமித்திரை லட்சுமண சத்ருக்கினரையும் பெற்றனர்.

**இராம :-** [இலட்சுமணனைத் தழுவிக் கொள்கிறான்]

**குசலவர் :-** இராமன் சீதையை மணந்தான். இலட்சுமணன் ஊர்மிளையையும், பரத சத்துருக்கனர் குசத்வஜன் மகள் இருவரையும் மணந்தனர். பாலியம் - யௌவனம் (குழந்தைமை - இளமை) இடையே மன்னன் மக்கள், தேவியரிடம் இன்புற்றிருந்தனர்.

**லட் :-** அழகு !

**இராம :-** காலம் தாழ்த்தல் வேண்டாம் ! பாடுங்கள் !

தந்தை நரைகூடி முதுமை எய்தினான். நாங்களே குடுமிவைத்த சிறுவர்களாக சாகேதபுரி மரங்கள் எல்லாம் முழங் காலளவெனத் திரிந்து விளையாடினோம்.

**குசலவர் :-** இராமபட்டாபிஷேக ஏற்பாடுகள் நடக்க, தன் மாமன் வீட்டிற்கு பரதன் சென்றிருந்தான்.

**இராம :-** [தனக்குள்] தாய் கைகேயியைப் பற்றிய நிந்தை வரலாம் [வெளிப்படையாக] அந்த கட்டத்தைத் தாண்டி சிதாபஹரணம் முதற்கொண்டு பாடுக !

**குசலவர் :-** பின், சீதையின் எழிலைச் சூர்ப்பணகை கூறக் கேட்டு தசமுகன் (இராவணன்) அவள் உடலைக் கவர்ந்து சென்றான். உள்ளத்தை (கற்பினைக்) கவரவில்லை.

[இலட்சுமணன் இராமனைக் காண்கிறான்]

கடலில் அணைகட்டி இராவணனுடன் போரிட்டு, வென்று மீண்டும் சாதேபுரிக்கு சீதையைக் கொணர்ந்தான் இரா்மன்.

**இராம :-** அடே ! சுருக்கமாயுள்ளது.

குசலவர் :- அரசினைப் பெற்ற இராமன், மக்கள் பழிச் சொற்கஞ்சி, சீதையைக் காட்டிற்கு அனுப்பிவிடுமாறு லட்சுமணனிடம் கூறினான். கண்ணீர் ததும்பிய முகத்தினளாய், அனாதையாகிய சீதையை, ரகுகுலக் கொழுந்தினைக் கருவில் தாங்கிய நிறை கர்ப்பிணியை, ஆளற்ற கொடும் விலங்குகள் வாழும் காட்டில் இலட்சுமணன் வி ட்டு வந்தான்.

லட்சு :- அந்தோ! இகழ்ச்சிக் குரியவன் லட்சுமணன் !

இராம :- உன் பிழை இதில் என்ன இருக்கிறது ? இராமனின் ஆற்றலன்றோ பாடப்படுகிறது. ஐயன்மீர் ! பாடுக !

குசலவர் :- இத்துடன் பாட்டு முடிகிறது.

இராம :-[உணர்ச்சிமிக்க] இலட்சுமணா ! துயர் மிகுகிறது.

குசலவர் :- நிராசையுற்ற சீதை தன்னுயிரை விட்டாளோ என்னவோ ? இன்னாத சொற் கூறற்கஞ்சிய கவிஞன் இதோடு கதையை முடித்துவிட்டான்.

குச :- இந்தச் சான்றோர்கள் சீதையின் கதையைக் கேட்டதுமே மிகுந்த துன்பத்தை யடைந்துள்ளனர் ! ஆதலின் கேட்கின்றேன் [லட்சுமணனைப் பார்த்து] தாங்கள் ராமயாயணகதா நாயகர்களான ராமலட்சுமணரா?

லட் :- அந்த துர்ப்பாக்கியவான்கள் நாங்கள் தான்.

குச :- சீதையை விட்டுவந்தது நீ தானா ?

லட் :- [நாணுற்று] துர்ப்பாக்கியவான் நான்தான்.
குச :- சீதை இராமனின் வாழ்க்கைத் துணைவியா? (தர்மபத்தினியா? )

*லட் :-* ஆம் !

*குச :-* பின் சீதையைப் பற்றியோ அவள் சந்ததி பற்றியோ ஏதேனும் செய்தி தெரிந்ததா?

*லட் :-* உங்கள் கீதத்தால் தெரிந்தது.

*இராம :-* இதற்குப்பின் மீண்டும் மங்களமானதைக் கேட்போமா? [சிந்தித்து] சரி! இப்படிக்கேட்கிறேன் ஐயன்மீர் ! நீங்கள் கற்றது இதுவரைக்கும்தானா? இன்னும் இருக்கிறதா?

*குசலவர் :-* எங்களுக்குத் தெரியாது.

*இராம :-* லட்சுமணா ! கண்வனுக்குத் தெரியுமோ என்னவோ? கண்வனை அழைக்கவும் !

[இலட்சுமணன் சென்று கண்ணுவனுடன் மீண்டும் வருகிறான்]

**கண்வன் :-** [பார்த்து] கண்களுக்கின்பமூட்டும் உருவெழில் மிக்க இராமன், சீதையின் குமாரர்களோடு, திஷ்ய, புனர்வசு நட்சத்திரத்திரங்கள் மருங்கிற்திகழும் மதிபோல அமர்ந்துள்ளான்.

*லட் :-* அண்ணலே ! கண்வன் வந்துள்ளான் !

*இராம :-*[வணங்கி] இவ் விருக்கையில் அமர்க !

**கண் :-** [அமர்ந்து] இராமாயணம் கேட்பதில் குதூகலமாயின் குசலவர்கள் எதுவரைக்கும் இசைத்தனர் ?

*லட் :-* சீதை காட்டில் விடப்பட்டது வரை குசலவர்கள் முடித்துள்ளனர் !

**கண்** :- அதன் பிறகு கேட்பீர்களாக !

**இராம** :- எப்படி இயலும்?

**குசலவர்** :-இராமன் துணைவியின் நலம் இசைப்பாரா?

**கண்** :-சீடர்கள் சொல்லக் கேட்ட வால்மீகி முனிபுங்கவன் தானே வந்து சீதையைத்தேறுதல்கூறி தபோவனத்திற்கு அழைத்துச் சென்றான்.

**இராம** :-பகவானால் ரகுகுலம் அருளப்பட்டது. நானும் கடைத் தேற்றப்பட்டேன்.

**குசலவர்** :- இராமன் துணைவி நலமுடன் இருப்பதாகத் தெரிகிறது!

[எல்லோரும் மகிழ்ச்சியடைகின்றனர் ]

**குச** :- [தனியாக] குழந்தாய் லவ! வால்மீகி தபோவனத்தில் சீதை என்ற பெயரில் யாரிருக்கிறார்கள்?

**லவன்** :- யாருமில்லை. செய்யுள் இசை நிரப்பும் பொருட்டாகவே சீதை சீதை என்ற சொற்கள் வருகின்றன.

**இராம** :- பின்பு! பின்பு!

**கண்வ** :-நிறை மாதங்களானபின் சீதை இரட்டைக் குழந்தைகளை வானத்தில் சந்திர சூரியர்களைப்போலப் பெற்றெடுத்தாள்.

**இராம** :-அண்ணல் வெல்க ! தெய்வ அருளால் ரகுகுலம் தழைப்பதாக !

**குசலவர்** :- மக்கள் பேற்றால் மன்னர்க்கு வெற்றி யுறுக!

**இராம்** :-[தனக்குள்]இந்த குசலவர்கள் தானோ?

**கண்** :- பிறவிச் சடங்குகள் [ஜாதகருமம்] முடிந்தபின் வால்மீகி அவர்கட்கு குச லவர் என்று பெயரிட்டார்.

**இராம** :- என்ன! இவர்கள் தான் சீதையின் புதல்வர்களா? ஆ! மகனே குச! குழந்தாய் லவா!

**இலட்** :-தேவி கருவிலுதித்த உன் திரு ஒளி இவர்கள் தானா?

**குசலவர்** :- ஓகோ! அவர்கள் இவர்கள்தானா! தந்தாய் ! காத்தருள்க! [எல்லோரும்பரஸ்பரம் அரவணைத்துக் கொண்டு மூர்ச்சையுறுகின்றனர் ]

**கண்** :- [வருந்தி] இதென்ன துன்பம் நேர்ந்தது. பேறிலாத நான் மங்களகரமானதென்று இசைக்கவும் இராமன் முதல் நால்வரும் மயங்கி வீழ்ந்தனர் .[பார்த்து] மூச்சு விடுகின்றனர். நான் இச்செய்தியை பகவானிடமும் தேவியிடமும் சொல்கிறேன்.

[வான்மீகி பரபரப்புடன் சீதையோடு வருகிறார்]

**வால்மீகி** :- குழந்தாய்! விரைக! தாமதிக்காதே! மூர்ச்சை உடனே தெளிவிக்காவிட்டால் ஆபத்தாகலாம்.

**சீதை**:- சொல்க! உள்ளபடி சொல்க! இராமன் மூச்சுவிடுகிறானா!

**வால்** :- ஆற்றியிருக்க! உயிர்ப்புள்ளது. மூச்சுவிடுவது தெரியவில்லையா!

**சீதை** :- தந்தை சொல் மேல் திடநம்பிக்கை இருக்கிறது.
**வால்** :- [தேடுகிறான்] மைதிலி! மனதைத்திடப்படுத்திக்

கொண்டு முன்னேபார் ! உன்கதை என்னும் பிரளய மாருதத்தால் இரகுகுலம் வீழ்ந்து கிடப்பதைப் பார்.

**சீதை** :- [நாணமுற்று] பகவன்னே! அண்ணலைக் காண்பதற்கு எனக்கு அனுமதியில்லை.

**வால்** :- [செருக்குடன்] நானிருக்க உனக்கு ஆணையிடுவதோ செய்வதற்குரியர் யார்? உன்னை வால்மீகியாகிய நான் ஆணையிடுகிறேன்! சென்றுபார், கூசாமல் கணவன் அருகில் செல்.

**சீதை** :-[பார்த்து] என்ன இப்படியாயிற்றே! எல்லா விதத்தும் நான் கெட்டோழிந்தேன்.

[வீழ்ந்தழுகிறாள்]

**வால்** :- எழுந்திரு! மயக்கமுற்றவர்களைத் தெளிவிப்பாயாக.

**சீதை** :- துர்பாக்கியசாலி நான் எப்படிப் புதல்வரைத் தேற்றுவேன்!

**வால்** :-ராமலட்சுமணர் மிகவும் மயங்கிக் கிடக்கின்றனர். முதலில் இவர்களைக் கவனிக்கவேண்டும் ! ஆதலின் நீ குசலவர்களைத் தேற்றுக ! நானும் இராமலட்சுமணரைத் தேற்றுகிறேன். குழந்தாய் இராமா! குழந்தாய் லட்சுமணா ! தேறுக !

**சீதை** :- குமாரா குசா! லவா! தேறுக ! தேறுக !

[தண்ணீர் தெளிக்கிறாள்]

**இராமன்** :- [உணர்வுற்று] ஐய கண்ணுவ?
வைகேகி உயிரோடிருக்கிறாளா?

**வால்** :- முன்னால்தான் இருக்கிறாள்!

**இராம** :- [பார்த்து] பகவான் வந்துள்ளீர்களா?

[நாணுறுகிறான்]

**வால்** :- நாணமுற வேண்டாம் ! துணைவி விஷயம் இரங்கத் தக்கதல்லவா?

**இலட்** :- [தேறி எழுந்து] அண்ணல் மூர்ச்சை தெளிந்தானா?

**இராம** :- துர்ப்பாக்கிசாலி எழுந்துள்ளளேன் !

**குசலவர்** :- [தேறி எழுந்து] ஆ ! தந்தையே ! காத்தருள்க!

[காலில் வீழ்ந்து அழுகின்றனர்]

**இராமலட்சுமணர்** :- [அரவணைத்துக்கொண்டு தேறுதல் கூறி] குழந்தைகாள்! வருந்தற்க !

**வால்** :- தந்தையைக் கண்டதும் உணர்வற்றவர்களே! யாருக்காக அழுகின்றீர்கள்! கண்ணீரைத்துடைத்துக் கொள்ளுங்கள். [குசலவர்கள் அப்படியே செய்து இராமனைக் கண்டவாறு நிற்கின்றனர் ]

**சீதை** :- [பிறரறியாதவாறு] இவர் யார்? நீங்கள் இப்படிப்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**இராம** :-அஹோ! வைதேகி பொருட்படுத்தாதிருக்கிறாளே! நெடுங்காலத்திற்குப் பிறகு கண்ட என்னை அருகிருந்தும் தன் முக மலர்ச்சியால் கூட மதிக்காமல் இருக்கிறாள்?

**வால்** :- [கோபமுடன் ] ஒ! அரசே! பரந்தமனப்பான்மையுள்ளவனே! பெருங்குடிப்பிறந்தவனே! ஆராய்ந்து தெளிபவனே! ஜனகனால் தரப்பட்டு தசரதனால்

ஏற்கப்பட்ட, அருந்ததியால் மங்களம் செய்யப்பட்ட, வால்மீகியால் பாராட்டப்படும், ஒழுக்கசீலமுள்ள, அக்னியால் பரிசுத்தமாக்கப் பட்ட , குசலவர்களின் தாயான, நிலமகளின் மகளான தேவி சீதையை மக்கள் பழிச் சொற் கேட்டதாலேயே நிராகரிப்பது உனக்கு முறைதானா?

**இராமன்** :-[கலக்கமுறுகிறான்]

வால் :- லட்சுமணா ! முறைதானா இது! எனினும் உன்னைச் சொல்வானேன். கட்டளைக் கிணங்கியவன். இளையவன் [இராமனைப் பார்த்து] தசமுகனை (இராவணனை) க் கொன்றபிறகு சீதையை ஏற்பதற்கு நீ எந்ததெய்வத்தைப் பிரமாணமாகக் கொண்டாய்!

**இராம** :-அக்னிபகவான்.

**வால்** :-அந்த நம்பிக்கையை இழத்தற்கு என்ன காரணம்?

**சீதை** :- அய்யோ! என் பொருட்டு அண்ணல் எவ்வளவு கண்டனத் துள்ளாகிறான்.

[காதுகளை மூடிக்கொள்கிறாள்]

**வால்** :-குசலவர்களின் தாய் பரிசுத்தத்தின் பொருட்டு அக்னி சாட்சியம் அமைந்திருக்க, கட்டுப்பாடில்லாத [எதையும் பேசும் (நிரங்குச) ] உலகினரின் பழிச்சொல் எவ்விதம் உன் உள்ளத்தில் பிரமாணமாயிற்று?

**இராம** :-இகழ் நீக்கும் பொருட்டு ....!

**வால்** :- என்னிடமே உன் திறமையைக் காட்டுகிறாயா? இயல்பாக பின்பற்றி நடக்கும் தன்மையரான சாதாரணமக்களின் உள்ளத்தில் அன்பு நிலைபெற்றிருக்கும்.

மன்னர்கள் இதயத்தில் இராது. மணலில் எள் விளைவதில்லையன்றோ?

குழந்தாய்! கிளறுவதால் பயனென்ன? குசலவர்களை அழைத்துக்கொண்டு நமது ஆசிரமத்திற்குச் செல்வோம்.

[நடக்கிறான்]

**இராமலட்சுமணர்** :- மன்னித்தருள்க மகரிஷி! சினந்தவிர்ந்து செல்க!

**வால்** :- [திரும்பிவந்து] வைதேகி! அரச கட்டளை தபோதனர்களையும் ஆணை செலுத்துகிறது. உன் பரிசுத்தத்தை நிரூபித்துக்கொள்.

**சீதை** :- நானா? எப்படி?

**வால்** :- நீ குற்றமற்றவள்.

**சீதை** :- [நாணமுடன்] மக்கள் நடுவே சொல்கிறேன். துர்ப்பாக்கியசாலி ஜனகன் மகள் கற்புநெறி தவறாதவள் என்று (தெய்வசாட்சியாகச்) சொல்கிறேன்.

**வால்** :- முழக்கமிட்டுச் சொல்; விரலுக்கேற்ற வீக்கம் [விவகார அனுரூபபிரதிகாரம்] [நோய்க்குத்தக்க மருந்து]

**சீதை** :- மகரிஷி கட்டளைப்படியே! [கரம் குவித்து நான்கு திசையும்நோக்கி] லோகபாலர்களே! வான்வழிச் செல்லும் தேவர்களே! கந்தருவ சித்த வித்தியாதரர்களே! யோக சக்தியால் எல்லா உலக ரகசியங்களும் கண்முன் காணும் வால்மீகி, விஸ்வாமித்திர, வசிஷ்டர் முதலிய மகரிஷிகளே! எல்லா உலகின் நன்மை தீமைகட்கும் கருமசாட்சியாக விளங்கும் பகவான் ரகுகுல பிதாமகன் சூரியதேவனே!

எல்லோரும் கேளுங்கள்! சீதை கற்பின் பரிசுத்தத்தின் பொருட்டு சத்தியம் செய்கிறேன்.

**வால்மீகி** :- தெய்வீக சக்தியினாலன்றி சீதையின் கற்பின் பெருமையால் மட்டும் விளைந்த ஆச்சரியங்களைக் காண்பீராக!

**எல்லோரும்** :- [வியப்புடன்] ஆச்சரியம்! ஆச்சரியம் ! தேவியின் வசனத்தைக் கேட்பதற்காகவோ என உலகிலுள்ள தாவர ஜங்கமங்கள் எல்லாம் ஒலியறிந்து அமைதியுடன் செயலற்றொடுங்கியுள்ளன. கடல் அலைகளின் அசைவற்று அமைதியுற்றது. இயல்பான சஞ்சலமுடைய காற்றும் வானில் ஒடுங்கிக்கிடக்கிறது. மதயானையின் காதுகள்கூட அசைவற்றுள்ளன. உலகமுழுதும் ஜானகியின் பேச்சைக் கேட்பதில் ஆர்வம் கொண்டுள்ளது.

**சீதை** :-யார் எல்லா உலக நன்மைக்காக தந்தை சொல் நிறைவேற்றினாரோ. யார் வீரமுடன் மலைகளைப் பெயர்த்து கடலை இரண்டாகப் பிளந்து அணைகட்டினாரோ. தேவ அசுர லோகங்களில் ஒரேவில் தாங்கியவர் எவரோ அத்தகைய ரகுகுல ஆனந்த மூர்த்தியாகிய உன்னைத் தவிர்த்து, பதிவிரதா தருமத்துக்கு விரோதமாக (கற்பிற்கு முரணாக) மற்றொருவரைக் கண்களால் கண்டதுமில்லை. சொற்களால் பேசவும் இல்லை. இதயத்தால் சிந்தித்ததும் இல்லை. இந்த சத்தியவாக்கினால், சகல லோக பிரத்தியட்சமாக காணற்குரிய தெய்வீக உருவம் தரித்து பகவதி பிருதிவி தேவி (நிலமகள்) என் இதய சுத்தியை உலகுக்கு தெளிவுறுத்துவாளாக!

[எல்லோரும் பரபரப்புறுகின்றனர்]

**வால்**:-என்ன இது? விளங்காத பயங்கரம், பாதாளத்திலிருந்து உருவாகிறது.

பாதாள மூலத்திலிருந்து ஓசை எழுந்து வானத்தைத்

இழித்துப் பேரிரைச்சல் முழங்குகிறது. திசைகளெங்கும் மலைகள் விழுந்து படுவதுபோல மெல்ல மெல்ல அசைகின்றன. கடல் கடையப் பட்டது போல கடல்நீர் விரைந்து எல்லை கடந்து பொங்கி வருகிறது. [சீதையைப் பார்த்து] சர்வலட்சணங்களும் உண்டாயின. மீண்டும் சத்திரிய வாக்கைச் சொல்க.

[சீதை மறுபடியும் கூறுகிறாள்]

[திரையில்]

ஆவும் அந்தணரும் நலம். ரகுகுலத்திற்கு நலம். மைதிலியின் சத்தியவாக்கால் பாதாளத்திலிருந்து எழுந்து குளித்து வந்தவள்போல, கண்ணாரக் காணும்படியான தெய்வீக உருவோடு நிலமகள் கடல் நடுவே தோன்றி உலகுக்குச் சாட்சியாகின்றாள்.

**வால்மீகி** :- [கேட்டுவியப்பு அடைகின்றனர்]

இந்த அற்புதங்கள் இதற்கு முன்பு கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.

பாதாளத்திலிருந்து பேரொளிசிறந்தொளிர்கிறது. குளிர்ந்த தாமரை மலர் மணத்தோடு பாதாளக் காற்று நாற்றிசையும் வீசுகின்றது. நிலமகள் தோன்றினாள்! அரசே வணங்குக! லட்சுமணா நமஸ்காரம் செய்! லவகுசர்களே! புஷ்பாஞ்சலி செய்க.

**எல்லோரும்** :- [அப்படியே செய்கின்றனர்]
[அப்போது தனக்கிணையான எழில்மிகு தோற்றத்துடன் நங்கையர் மலர்கள்தூவ, நிலமகள் பாதாளத்திலிருந்து வருகிறாள்]
**எல்லோரும்** :- [கரம்குவித்து வணங்கி]

உலகமுழுதும் காத்தருள்வாய் போற்றி.
சேடன் தலைமேல் திகழ்வோய் போற்றி
விரும்பிய தெல்லாம் விளைப்போய் போற்றி
தேவர்க்கும் அருள் சுரப்போய் போற்றி.
விந்தமும் இமயமும் விளங்குள முலையெனத்
திகழ்தரும் உயரிய தேவி போற்றி.
கங்கை பூ மாலையாய்க் காட்சி தரவே
கடலுடை யுடுத்த கவினே போற்றி.
இந்திரற் வேள்விக் கியல்வன ஈவோய்!
மணிகளும் வளனும் மருந்தும் தருவோய்!
பகவதி! தேவி! பார்மக ளே! யாம்
அகநெகிழ்ந்தென்றும் அஞ்சலித் திடுவோம்!

***நிலமகள் :-*** [சுற்றிலும் பார்த்து] ஆகா! பதிவிரதையரின் ஆணைகள் மீற இயலாதவையன்றோ!

வானமும் நிலமும் பரவும் கதிரவன் ஒளி எங்கு புகமாட்டாதோ, கம்பீரமும் மிகுவிரைவுமுடைய கருடனும் எங்குபுகலரிதோ, யோகியர்க்கும் தவமுனிவர்க்கும் செயற்கரிய இடம் எதுவோ, அந்த பாதாளத்திலிருந்து சீதையின் ஆணையால் கவரப்பட்டு நான் வந்துள்ளேன்.

ஆதலின் அவளிடமே பேசுகிறேன்! குழந்தாய் மைதிலி! எதன் பொருட்டு என்னை அழைத்தாய்?

***சீதை :-*** [வியப்புடன் கண்டு] பகவதி தாங்கள் யார்?

***நிலமகள் :-***என்னைத் தெரியாதா? இரண்டாவது பிரணவம் என்று முனிவர்கள் பாராட்டும், எல்லா சராசரங்களையும் ஈன்ற மூலமான என்னை அடையவே முனிவர்கள் தவம் செய்வர். நிலமகள் யான். ஜானகி! உனக்காகவே வந்துள்ள என்னைத் தெரிந்து கொண்டாயா? குழந்தாய் மேலும் ஒன்று தெரிந்துகொள்க!

முன்னொரு காலம் மகாவராகத் (பன்றியவதாரம்) தாலும், இந்நாளில் உன் ஆற்றலாலுமே நான் இவ்விதம் துணிந்து வெளிப் போந்துள்ளேன்.

**சீதை** :- [கரம் கூப்பிவணங்கி] பகவதி! அருள்கூர்ந்து நீயே என் கற்பின் சாட்சியாதலின் என் சீலம் உலகறியச் செய்வாயாக!

**நிலமகள்** :- அப்படியே [சுற்றிலும் பார்த்து]

முனிவர்களே! தானவர்களே! சித்தர்களே! யட்ச கந்தருவ கின்னரர்களே! மானுடர்களே! லோகபாலகர்களே! சிறிது கவனமாகக் கேளுங்கள்! தசரத புத்திரனான இராமனைத்தவிர வேறெவரையும் மனத்தாலும் சிந்தித்தறியாள் என்பதை அனைவரும் அறிவீராக!

**எல்லோரும்** :-[மகிழ்ச்சியுடன் ]ஆகா! ஆச்சரியம்! நிலமகள் அறிவித்த சீதையின் கற்பின் பரிசுத்தத்தை வழிமொழிவது போல இந்நிமித்தங்கள் உருவாகின்றன. வானவர் துந்துபி திசையெலாம் முழங்கினர். வானிலிருந்து இடையறாது பூமழை பொழிகிறது. தேவிக்கு யாரோ திடீரென விதானம் [பந்தல்] அமைத்தாற்போல விண்ணில் தோற்றம் புலிக்கிறது.

[திரையில்]

வெல்க! சத்திய சந்தனான தயரதன்!
வெல்க! ஒரே வில் தரித்த இராமன்.
வெல்க! களங்கமற்ற ரகுகுலம்.
வெல்க! கற்பிற் சிறந்துயர்ந்து தேவி சீதை!

**நிலமகள்** :- வைதேகி பதிவிரதைதானல்லவா?

**எல்லோரும்** :- [அஞ்சலி செய்து] இயல்பாகவே பரிசுத்தமான கற்பின் செல்வி, மக்கள் பழிச்சொல் எனும்

மேகத்தால் மூடப்பட்டு, பகவதி! இன்று உன்னால் *சரத்காலம் வந்ததும் மிக்கொளிரும் நிலவு போல ஜானகி பிரகாசிக்கிறாள். இனி தம்பதிகள் இணைவதில் வியப் புண்டோ?

**வால்மீகி** :- இராமா! சீதையின் பரிசுத்தம் அறிந்தாயல்லவா? அவளை ஏற்றுக்கொள்க!

**இராம** :-தங்கள் ஆணைப்படியே! குழந்தாய் லட்சுமணா! காலில்வீழ்ந்து வணங்குக!

**சீதை** :- [கரம் கூப்பி மகிழ்ச்சியுடன்] அண்ணால் வெல்க!

**வால்**:- ஆகா! என்ன உயர்ந்த பண்பாடு! ஏற்றுக் கொண்டவிதத்தில் என்ன அடக்கம்.

**இலட்** :- [மகிழ்ச்சியுடனும் நாணத்துடனும் ] அம்மையே! பாவி. லட்சுமணன் வணங்குகிறேன்.

**சீதை** :- உன்னைப் பழிப்பதேன்? பெரியோர்கட்கு அடங்கி நடந்து நீடுழி வாழ்க!

**வால்** :- குழந்தாய்! இராமா! வைதேகியை ஏற்றாயல்லவா! நீயே பேசி கைபிடித்து அழைத்து வந்து வேள்வியியற்றுவாயாக?

**இராம** :- [நாணமுறுகிறான்]

**வால்** :- நாணமேன்? முன்பு எல்லோருக்கும் முன்பாக கரம் பிடித்து மணம் புரிந்தனையல்லவா? இப்போதென்ன புதுமையுள்ளது. வேள்விக்காகச் செய்கின்றாய்!

**இராம** :- ஆம்! ஒழுங்குமுறை அதுதான்! குருவின்

கட்டளையும் கூட[சீதையைக் கரத்தால் பற்றி ] வைதேகி! திருவுடையோய்! வாழ்க்கைத் துணைவியை ஏற்பதால் புதல்வரைப் பெறுதல், வேள்வி இயற்றுதல் என்னும் இரண்டு பயன் உள்ளதெனச் சான்றோர் உரைப்பர். அதில் முதலாவதை மகிழ்ச்சியுறத் தந்துவிட்டாய். இரண்டாவதை (வேள்வியியற்றல்) இல்லம் புகுந்து இயற்றிவைப்பாயாக!

**சீதை** :- அண்ணலின் ஆணை! என் உயிர் மீண்டும் வந்தது. இன்றே உயிர்ப்புற்றேன்.

**நிலமகள்** :- வேள்விகள் தடையற்றியல்க! இந்திரன் காலமறிந்து மழைபொழிவிப்பானாக! மக்கள் துன்பங்களின்றி வாழ்வார்களாக. சீதாராமர்கள் இணைந்தின்புறுவராக.

[மறைகிறாள்]

**இராம** :- என்ன! நிலமகள் மறைந்துவிட்டாளா!

**வால்** :- தெய்வங்கள் சிறிது நேரமே இருப்பார்கள் !

**இராம** :- மகரிஷி ஆணையிட்டால் இலட்சுமணனுக்கு பட்டம் தர விரும்புகிறேன்.

**இலட்**:-[வணங்கி] அண்ணல் அருள் கூர்ந்து, புதல்வர்கட்குரிய இளவரச பட்டத்தை எனக் களிக்காமல், இத்துணைநாள் பின் தொடர்ந்து இருந்த லட்சுமணனை மன்னித்தருள்க!

**வால்** :- இக்ஷ்வாகு குலத்திற்குத் தகுந்த சொற்கள்!

**இராம** :- இலட்சுமணன் வேண்டுகோளைத் தவிர்க்க இயலாதல்லவா? என் செய்வது? இக் கடனை

புதல்வர்கட்கே ஈவது தகுந்தது. நானே இயற்றுகிறேன். இலட்சுமணா! அபிஷேகத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்க!

**இல** :- அண்ணலே! அபிஷேக திரவியங்களைக் கொணர்ந்த கரங்களுடன் தேவர்கள் முன்புள்ளனர்! காண்க! நிலவொத்த வெண் கொற்றக் குடையுடன் இந்திரன் உள்ளான். கங்கையும் இந்திராணியும் சாமரை ஏந்தியுள்ளனர். பொற்குடங்களில் தீர்த்தம் கொணர்ந்து மக்கள் குழுமியுள்ளனர். இவ்வளவு எளிதாக ஏற்பாடானது மிகு வியப்பேயாம்.

**இராம** :- நாம் காவலர்கள் ஆனோம்.

**இல** :- இதில் பங்கு பெற்று அருளைப்பெற்றேன்.

**இராம** :- லட்சுமணா! பிரம்பைபிடி.

[வால்மீகியைக் கண்டு]

பகவன்! பேரனுக்கு முடி சூட்டுங்கள்!

**வால்** :- [கலசம் ஏந்தி அருகடைந்து] ஓ! சாகேதபுர வாசிகளே! சகலதிசைகளிலும் இருந்து வந்துள்ள மன்னர்களே! விபீஷண, சுக்ரீவ, ஹனுமான் முதலிய மாவீரர்களே! எல்லோரும் கேளுங்கள்.

சீதையின் மூத்த புதல்வன் குசன் எனும் பெயருடைய மாவீரனுக்கு இந்த சாமராஜ்யயாதிபதியாக அபிஷேகம் செய்துள்ளேன். இவன் ஆணையினை ஏற்பீர்களாக. சுவர்க்கத்தில் இந்திரனும் பூலோகத்தில் மாந்தாதாவும், பாதாளத்தில் வாசுகியும் போல உனக்கு மங்களமாகட்டும்.

[அபிஷேகம் செய்கிறான். திரையில் ஜய ஜய மகாராஜா என்று கோலாகலம்]

**சீதை** :-இன்புற்றேன். என் நோன்புபலித்தது.

**இராம** :- இலட்சுமணனுடைய விருப்பம் நிறைவேறியது.
[ எல்லோரும்மகிழ்ச்சியடைகின்றனர் ]

இராமன்:- [குசனைப் பார்த்து ] உன் ஆணையின்படி லவனை இளவரசாக்க விரும்புகிறேன்.

குச :- தந்தையார் ஆணைப்படி நடப்பேன்.

**இராம** :- கலசம் கொணர்க.

குச மகாராஜாவின் தம்பி லவன் எனும் பெயருடையவனை நான் மன்னராணைப்படியே இளவரசபட்டம் அபிஷேகம் செய்கிறேன்.

(எல்லோரும் ! மகிழ்ச்சியுறுகின்றனர்)

**வால்மீகி** :- உனக்கினி ஏதேனும் விருப்பம் உள்ளதா.

**இராமன்**:-தங்கள் தரிசனத்தால் பரிசுத்தமானவளும், வேள்வித்துணைவியுமான எனது வாழ்க்கைத்துணைவியை அடைந்தேன். என்னிரு மக்களும் உலகரசாட்சி ஏற்றனர்.

இனி வேறெனக்கென்ன வேண்டும்? தங்களிடம் என்ன கேட்பதற்குள்ளது?

**வால் :-** சரி! இப்படியாகுக!

சிவன், திருமால், பிரமன், வருணன், இந்திரன், அக்னி, வாயு முதலிய தேவதைகளும், பாதாளம், பூலோகம், சுவர்க்கம் ஆகிய மூவுலகும், வேதமும், கற்றறிந்த தத்துவ ஞானிகளும் தவமுனிவர்களும் மன்னருக்கு எல்லா நலன்களும் ஈவார்களாக! ஆவினம் தழைப்பதாக!

[எல்லோரும் செல்கின்றனர்]

முற்றிற்று

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்கு கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே **'நாம்பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'** என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*28.3.2000*

***மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,***
***சரசுவதி மகால் நூலகம்.***